REGISTERED AT THE G. P. O. AS A NEWSPAPER

# ஈழகேசரி

தேசிய வார வெளியீடு

மலர் 19 | சுன்னாகம், சர்வதாரி தை உச (காந்தி ஆண்டு 80) 6-2-'49, ஞாயிறு | இதழ் 27

பயிற்சிமூலம்
பாஷைத் தேர்ச்சி
ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா,
(M. A., M. LITT.)
பாடசாலை மாணவர்களின் உபயோகத்துக் கேற்றவிதமாக வித்தியாதரிசினி ஸ்ரீமதி இரத்தினம் செல்லையா அவர்களால் உகந்தமுறையில் எழுதப்பட்டது. சிறந்த வசனப் பகுதிகளையும், திருக்குறள், நீதிநெறிவிளக்கம், பாரதிபாடல் முதலியவற்றிலிருந்து தெரிந்தெடுக்கப்பெற்ற செய்யுள்களையும் கொண்டது.
விலை ரூ. 1-75 தபாற்செலவு வேறு.
தனலக்குமி புத்தகசாலை : சுன்னுகம்

# சுதந்திர அலங்காரங்கள்

## கொழும்பு பிரகாசிக்கின்றது

[விசேஷ நிருபர்]

**சுதந்திர சோதியிற் கொழும்பு மாநகரம் மிதந்துகொண்டிருக்கின்றது. தீபாலங்கார மயத்திடையே சிங்கக்கொடிகள் கம்பீரமாகப் பறந்தடிக்கின்றன.**

**சுதந்திர தினத்தை ஞாபகப்படுத்துவதுபோன்று, காலை 8 மணிக்குக் கொழும்புத் துறைமுகத்தில் 21 பீரங்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன.**

அதிகாலையிலிருந்தே காலிமுக மைதானத்தை நோக்கி ஜனக்கூட்டம் குவிந்த வண்ணமாகவே யிருந்தது. சொற்ப நேரத்தால் அங்கு ஓரே ஜன சமுத்திரந்தான். குதிரைப்படை வீரர்களின் பவனியும், அலங்கார உடை தரித்தோரின் அணி வகுப்பும் கண்கொளாக் காட்சிகளாகவே யிருந்தன.

சொற்ப நேரத்தாற் பிரதம தேசாதிபதி சேர் மூர் அவர்களும் பிரதம மந்திரி சேனநாயகா அவர்களும் சகல சீர்வரிசைகளுடனும் வந்திறங்கினர். அணி வரிசைகளைப் பார்வையிட்ட பின்னர் இருவரும் விசேஷ பிரார்த்தனையொன்றிற் பங்கு பற்றுவதற்குப் புறப்பட்டனர்.

### பிரதமர் வழிபாடு

இதற்கு முன்னதாகப் பிரதமர் சேனநாயகா 'டெம்பிள் ட்ரீஸ்' என்ற தமது இல்லத்துக்குப் பின்பாகமாகவுள்ள பொல்வத்த பௌத்த கோயிலுக்குச் சென்று வழிபட்டார். பால்போன்ற வெள்ளை உடைதரித்து வழிபாட்டுக்குச் சென்ற பிரதமர் ஒரு பிக்குபோன்றே காணப்பட்டார். அங்கு அடக்க ஒடுக்கமாக நின்று வெள்ளைமலர் தூவி வணங்கிய பின்னரே சுதந்திர விழா வைபவங்களிற் புன்முறுவலுடன் ஈடுபட்டார்.

வியாழக்கிழமை இரவே தீபாலங்காரங்கள் கண்களைப் பறிக்கலாயின. மக்கள் வதியும் இல்லங்களும் அரசாங்கக் காரியாலயங்களும் ஒளி வெள்ளத்தில்மூழ்கின்றன. இராணி வீதியிலுள்ள மணிக்கூண்டுக் கோபுரமும், பிரதிநிதிகள் சபையும் பிரதமரின் இல்லமும் குறிப்பிடத்தக்கன. பிரதம தேசாதிபதி வதியும் மாளிகை செந்நிற ஒளிப்பிரவாகத்திற் காட்சியளித்தது. இலங்கை வங்கியின் வாயிலை அழகுற அமைக்கப் பெற்றிருந்த வாள் ஏந்திய சிங்கம் எத்தனையோ பேரின் கவனத்தைக் கவர்ந்துவிட்டதென்றே சொல்லவேண்டும். அவ்வளவு அற்புதமான வேலைப்பாடுகளுடன் அச்சிங்கம் . வாலை உருவிய வண்ணம் ஒற்றைக் காலைத் தூக்கிக்கொண்டு நின்றது.

### ஞாபக சின்னம்

சுதந்திர தினத்தன்று காலை 10-35 மணிக்கு மிக முக்கியமானதோர் நிகழ்ச்சி டொரிங்டன் சதுக்கத்தில் நடைபெற்றது. இச் சுப முகூர்த்தத்தில் போக்குவரத்து மந்திரி சேர் யோன் கொத்தலாவல சுதந்திர ஞாபகசின்னம் நிறுவப்படும் இடத்தில் அஸ்திவாரத்தை வெட்டி ஆரம்பித்துவைத்தார். இங்கு பிற்பகல் அஸ்திவாரக் கல் பிரதமரால் நாட்டப்படும்போது ஒலைச் சுருள்களுடன் ஓடிவருபவர்களின் செய்தியை நான்கு பெண்மணிகளிடமிருந்து பெற்று நவரத்தினங்கள் பதிக்கப்பெற்ற பெட்டிக்குள் வைத்து அஸ்திவாரம் இடப்படும். இக் கட்டுரை அச்சேற முன்னர் அஸ்திவாரக் கல் நாட்டுவிழா வெகு அழகாக நடந்தேறிவிடு மென்பதை வாசகர்களுக்கு ஞாபகமூட்ட வேண்டியதில்லை.

### பிரதமர் செய்தி

பிரதமர் சேனநாயகா விடுத்துள்ள செய்தி ஒன்றில் சென்றுண்டில் இலங்கையோடு தொடர்புற்ற இரு முக்கிய நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்டிருக்கின்றார். 1. ஐக்கிய நாடுகள் சங்கத்தில் அங்கத்துவம் கோரி இலங்கை செய்த விண்ணப்பம். 2. லண்டனில் ஒக்டோபரில் நடைபெற்ற சாம்ராச்சிய

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

# பொம்மைகளாகாதீர்

## இலங்கைக்கு அமெரிக்கா போதனை

மனிதன், வாழ்க்கையை நடாத்துவதற்கும் தொழில் புரிவதற்கும் பயிற்சியூட்டுவதே கல்வியின் நோக்கமாகும். சுதந்திர இலங்கையைப் புதுமைப் பொலிவுடன் அமைக்கவேண்டிய பெரும் பணி இன்று இலங்கை மக்களைச் சேர்ந்துள்ளது. இதற்காக ஒவ்வொருவரும் சலியாது உழைக்கவேண்டியவர்களாகின்றனர். இவ்வாறு சமீபத்தில் (29-1-49) வட்டுக்கோட்டையிலுள்ள யாழ்ப்பாணக்கல்லூரியின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவிற் பேசும்போது ஸ்ரீ பிலிக்ஸ் கோல் அவர்கள் குறிப்பிட்டார்கள்.

அமெரிக்க அரசாங்கத்தின் விசேஷ பிரதிநிதியாக கோல் அவர்கள் இலங்கையிற் பதவி வகித்து வருகின்றார். அவர் தொடர்ந்து பேசியதாவது: சொந்த நாட்டின் வாழ்க்கைத் தரத்தைச் செம்மையாக்குவதற்காகவும், பொருளாதார நிலையைச் சீராக்குவதற்காகவும் உழைப்பது அந்நாட்டு மக்களின் கடமையாகும். ஏனைய நாடுகளின் வாழ்க்கைத் தரம் உயர்ந்திருப்பதுபோல் இலங்கையின் வாழ்க்கை நிலையையும உயர்த்த வேண்டிய பணி இலங்கை மக்களைப் பொறுத்ததொன்றாகும். சாத்தியமான எந்தத் தொழிலையும் செய்வதற்கு மக்கள் மனத் துணிவுடன் அத்துறைகளில் ஈடுபடவேண்டும். இப்பண்பு அமெரிக்க மக்களிடம் அபரிமிதமாக இருக்கின்றது.

மக்களின் வாழ்க்கை பரிமளிப்பாக இருக்கவேண்டுமாயின் அவர்களின் பொருளாதார நிலையும் பூரிப்படைந்து வரவேண்டும். பொருளாதாரச் சுதந்திரத்துடன் வாழ்வதே ஒவ்வோர் மாணவனினதும் வாழ்க்கையின் இலக்காக அமைதல் அவசியமாகும். சொந்த நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களின் தொகை பெருகுவதுடன், அவற்றின் குண

[தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க]

# பித்தளை, வெங்கலம்!
# கலைவிழாக் கலகலப்பு

4-2-49

**இலங்கைக்குச் சுதந்திரங் கிடைத்து ஒருவருடமாகிவிட்டது. இதைக் கொண்டாடுவதற்காக அரசாங்கம் கலைவிழா ஒன்றையும் ஏற்படுத்தியதுடன் நில்லாது, அக் கலைவிழாவுக்கென ரூ. 20,000க்கு மேலாகக் கரைத்துத் தெளித்துமிருக்கின்றது.**

சென்ற செவ்வாய்க்கிழமை பிரதிநிதிகள் சபை கூடியபோது குறித்த தொகைக்கு அனுமதி கோரி நிதி மந்திரி ஒரு விண்ணப்பத்தைச் சமர்ப்பித்தார். ரூ. 20,000த்துடன் கலைவிழா சிறப்புற மாட்டாது. இதற்குக் குறைந்த பட்சம் ரூ. 40,000 மாயினும் வேண்டும். ஆகவே இதில் அரைவாசியை நாட்டுமக்கள் உதவியிருக்கின்றனர்எனத் தெரிகின்றது.

### இது ஒரு தமாஷ்!

நிதிமந்திரி இவ்வளவு தொகையையும் கலையின்பெயரால் வாரி இறைப்பதையுணர்ந்த தோழர் கெனமன் சபையில் அன்று கனன்றெரிந்தார். கலைவிழாக் கண்காட்சியெல்லாம் வெறுந் தமாஷ். அரும் பாடுபட்டுத் தேடிய பணத்தை நல்ல வழியிற் செலவு செய்யலாமே? அரசாங்கம் கலையை வளர்க்க விரும்பினால் இலங்கையிலுள்ள . சைத்திரிகர்களுக்கும், கலைஞர்களுக்கும் இத்தொகைப்பணம் உதவி அவர்களைக் கைதூக்கிவிடலாமே யெனத் தோழர் கெனமன் தெரிவித்தார்.

அவரைத் தொடர்ந்து ஸ்ரீ றெஜி பெரோரா முழக்கித் தள்ளினார். கலையின் போஷகராகத் தாம் விளங்குவதை நிதிமந்திரி விரும்புகின்றாரா? என ஒரு போடுபோட்ட ஸ்ரீ றெஜி கலைவிழா வெறும் அரசியற் பிரசாரமெனவும் கூறி, குறித்த ரூ 20,000த்தையும நிரந்தரக்கலை வளர்ச்சிக்காகப் பிரயோசனமான வழிகளிற் செலவு செய்யலாமேயெனவும் யோசனை கூறினார். கலை வளர்ச்சிக்காக உகந்த கலாசாலையோ அல்லது கலைக்கழகமோ இல்லாத ஒரு நாட்டிற் "கலைவிழா நடாத்துகின்றார்களாம், கலைவிழா!" என்ற ரீதியில் அவர் நிதி மந்திரியின் கலைவிழா முயற்சிகளைப் பலமாகக் கண்டித்தார். நிதிமந்திரியாரின் இந்த விழாவில் வெறும் பித்தளை வெங்கலப்பாத்திரங்களும் நகைக்கடைகளுமே படையெடுக்குமெனவும் அவர்எள்ளிநகையாடினார்.

எத்தனைபேர்தான் கூடிக் கரடியாகக் கத்தினாலும் யு. என். பி. கட்சியினர் தாம் நினைத்தபடியே நடந்து வருகின்றனர். ஆகவே, நிதிமந்திரி ஸ்ரீ ஜயவர்த்தன கேட்ட தொகையை அரசாங்கம் மறுபேச்சின்றிக் கொடுத்துவிட்டது.

### ஹிட்லர் ஆட்சியா?

பொலிஸ் திருத்த மசோதாவை இரண்டாவது முறை




யாகப் பிரதம மந்திரி அன்று சபையிற் சமர்ப்பித்தபோது அவர் எதிர்க் கட்சியினரிடம் சரியாக வாங்கிக் கட்டினார். பிரதமரும் அவர்களுக்கெல்லாம் தகுந்த பதில் கூறித் தமது கட்சியை நிலைநாட்டி வைத்தார்

சாதாரண பொலிஸ் படையாற் சமாளிக்க முடியாத கலகங்களும் குழப்பங்களும், எழும வேளைகளில் உதவிக்குச் செல்ல மற்றுமோர் பொலிஸ்படை நிரந்தரமாக ஏற்படுத்துவதே இம் மசோதாவின் நோக்கமாகும். விருப்பமானோர் இதிற் சேர்ந்து கொள்ளலாம். மக்களின் படையென்ற அலங்கார நாமத்துடன் இது விளங்கும். ஆனால் இதன் உயிர் நாடி மட்டும் பொலிஸ் அதிகாரியிடம் ஒப்புவிக்கப்படும்.

இதைக் கண்டித்துப் பேசிய தோழர் கெனமன், குறித்த பொலிஸ் மசோதாவானது தொழிலாளர்களது உரிமைகளைப் பறிமுதல் செய்வதற்கு எழுந்துள்ள ஒரு சூழ்ச்சியெனவும், அது ஓர் அடக்குமுறைச் சட்டமெனவும் உறைப்பாகப் பேசினார்.

கெனமன் அன்னியமொழியான ஆங்கிலத்திலே தாக்கினார். ஆனால் ஸ்ரீ குணவர்த்தன சிங்களத்தில் வெளுத்து வாங்கினார்.

அப்படிப் பேசும்போது கௌரவமற்ற முறையிற் சில சொற்களைப் பிரயோகித்திருந்தார் எனச் சிங்கள நண்பர்கள் தெரிவித்தார்கள். சபைத் தலைவரும் ஸ்ரீ ரொபேட் குணவர்த்தன அவர்களை மரியாதையாகப் பேசும்படி உரிமையுடன் வற்புறுத்தியிருந்தார்.

இப் பொலிஸ் மசோதாவானது நாட்டிலே ஹிட்லர் ஆட்சிக்கு விதைதூவுகின்றதென்பதை கொல்வின் ஆர் டி சில்வா அவர்களின்கட்சியாகும்:

ஜனநாயகம் என்ற அலங்காரப் போர்வைக்குள் இருந்துகொண்டு யூ. என். பி. அரசாங்கம் பாரபட்சமாக நடந்துகொள்ளுகின்றதெனஅவர் தெரிவித்ததுடன் ஐக்கிய தேசியக்கட்சிக்கு ஆதிக்கவெறி தலைக்கேறிவிட்டதெனவுங் கூறினார்.

### மாலை சூட்டினர்

சுதந்திர தினமாகிய வெள்ளிக்கிழமை யன்று சபைத் தலைவர் ஏ. எவ். மொலமூரே அவர்கள் இலங்கைத் தேசபக்தர்களாக விளங்கிய சேர் பொன் இராமநாதன், சேர் பொன் அருணசலம் ஆகிய இரு பெரியாரின் உருவச் சிலைகளுக்கு மாலைகள் சூட்டிக் கௌரவித்தார்.

விக்டோரியப் பூங்காவில் உள்ள ஸ்ரீ எவ். ஆர். சேனநாயகா அவர்களின் சிலைக்கு ஸ்ரீ எஸ். பராராஜசிங்கம் அவர்கள் மலர்மாலை யணிந்தார். ஸ்ரீ எவ். ஆர் சேனநாயகா அவர்கள் இலங்கைப் பிரதமரின் சகோதரனுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்ணலுக்கு அஞ்சலி

### தெல்லிப்பளை

தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி தமிழ் மன்றம் 30-1-49 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணியளவில் கல்லூரி அதிபர் திரு. து. ஜெயரத்தினம் அவர்கள் தலைமையில் பிரார்த்தனையுடன் ஆரம்பமானது. அவ்வமையம் **ஈழகேசரி** அதிபர் திரு. நா. பொன்னையா அவர்கள், காந்தீயத் தத்துவங்களின் முப்பொருளான அகிம்சை, தியாகம், சத்தியம் மூன்றையும் மாணவர்கள் மனங்கவரும்படி நகைச் சுவையோடு அழுத்தமாகப் பேசினுர். பின்பு புலவர் திரு. நா. சிவபாதசுந்தரம் அவர்களால் காந்தி அடிகளின் பிள்ளைப் பருவத்தைப்பற்றி விரிவாகப் பேசப்பட்டது.

தலைவர் அவர்கள் ஈற்றில் நிறைவுரையாக காந்தீயத்தை மீண்டும்வற்புறுத்திப்பேசினுர்

ஆசிரியர் திரு. செ. சின்னத்துரை அவர்கள் குறிப்புரை கூறி ஈற்றில் நன்றி கூறினுர். பிரார்த்தனையுடன் விழா நிறைவேறியது.

### மட்டக்களப்பு

அண்ணல் காந்தியடிகளது சிரார்த்த தினக் கூட்டம், மட்டக்களப்பு விவேகானந்த மண்டபத்திற் பக்தி சிரத்தையுடன் நடந்தேறியது. சுவாமி நடராஜானந்தர் தலைமை வகிக்க "ரகுபதி ராகவ" பஜனையோடு கூட்டம் ஆரம்பமானது. பின்னர், பண்டிதர் வி. சி. கந்தையா அவர்கள் மகாத்மாவை உலகு பின்பற்ற வேண்டிய முக்கியத்தைப் பற்றிப் பேசினுர். அக்கரைப்பற்று ஸ்ரீ இராமகிருஷ்ண வித்யாலயத் தலைமை ஆசிரியர் திரு. க. நடராசா அவர்கள் காந்தியடிகளதுபிரிவைப் படம் பிடித்தாற் போல் எடுத்துக் காட்டுகளோடு பேசினுர். பரமஹம்ஸதாசன் இயற்றிய "காந்தி நினைவு"ப்பாடலை திரு. சி. நாகையா அவர்கள் பக்க வாத்தியங்களுடன் பாடினுர். செல்வி சாந்தாவதியும், ஜனுப் எம். சாஹுல் ஹமீதும் காந்தீயப் பாடல்களைப் பாடிய பின்னர் திரு. வ. சிவசுப்பிரமணியமவர்கள் காந்திஜீயின் வாழ்க்கையின் அரிய தத்துவத்தை எடுத்துக் கூறினுர். திரு. ம. சிவநேசராசா அவர்களுடைய வந்தனுேபசாரத்துடன் கூட்டம் இனிது நிறைவேறிற்று.

### திருகோணமலை

சென்ற 30-1-49 திகதி பிற்பகல் 5 மணிக்கு இந்துக் கல்லூரி மண்டபத்தில் ஓய்வு பெறும் இந்துக்கல்லூரி தலைமை ஆசிரியர் திரு. ப. இராமச்சந்திரா அவர்கள் தலைமையில் மகாத்மா காந்தியின் சிராத்ததினம் காந்தி சேவா சங்கத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது. 'ரகுபதி ராகவ ராஜாராம்', 'சொல்லுவம் வைஷ்ணவன்', என்ற காந்திஜிக்கு மிகவும் பிரியமான இரு பாடல்களைத் திருமதிகள் இ. இராசமணி, து. சாமளா தேவி பாடியதும் கூட்டம் ஆரம்பமானது.

அடுத்தாற்போலத் தலைவரின் முன்னுரைக்குப் பின்னர், நாமக்கல் கவிஞர் திருச்சி ரேடியோவில் மகாத்மா காந்திக்குத்தமிழ்நாட்டின் அஞ்சலி செலுத்திப் பாடிக்கொண்டிருந்த அதே நேரத்தில், திரு. கோ. இராஜகோபால் அவர்கள் கவிஞரின் அதே பாடல்களை ராகமாலிகையில் வெகு அழகாகவும், உருக்கமாகவும் பாடி அஞ்சலி செய்தார்கள். அப்பாடல்கள் அச்சிட்டுச் சபையோருக்கு விநியோகம் செய்யப்பட்டன இது இலங்கையில் 30-1-49 திகதி மாலை 5 மணியளவில் கவிஞரின் பாடல்களைப் பொதுக்கூட்டத்தில் வெளியிடவேண்டு மென்ற கவிஞரின் ஆக்ஞைப்படியே நடைபெற்றது.

அதன்பின் ஞானக்கடல் ஆசிரியர் உயர்திரு அன்பர் பூபதிதாஸர் அவர்கள், காந்தி அடிகளின் தத்துவஞானங்களை உணர்ச்சியுடன் எடுத்துரைத்தார். இந்திய முஸ்லீம்களின் பொருட்டு உலகம் காந்திஜியை இழந்திருக்கிறது, முஸ்லீம்கள் அடிகளுக்கு மிக மிக கடமைப்பட்டிருக்கிறுர்கள். குர்ஆனின் வேதவாக்குப்படிக்கு இந்த இருபதாம் நூற்றுண்டில் வாழ்க்கையை நடத்திக் காண்பித்தவர் மகாத்மா காந்தி ஒருவர்தான். அப்படியே கிறிஸ்து சமயம், இந்து சமயம், பௌத்த சமயம் இவைகளெல்லாம் நமக்குப் போதித்த வழிகளிலேயே காந்தியடிகள் அழைத்துச் சென்றிருக்கிறுர்கள். ஆகவே அண்ணல் சென்ற பாதையை நோக்கிச் செல்வோம் வெற்றி நமதே என அவர் குறிப்பிட்டார்.

ஈற்றில் திரு. எம். எல். வல்தாரிஸ் அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவெய்தியது.

### வதுளை

வதுளை இலங்கை இந்திய காங்கிரஸ். ஊவா புத்த வாலிப சங்கம், முஸ்லீம் வாலிபர் சங்கம், செண்ட் மார்க்ஸ் இளைஞர் சபை, மெதடிஸ்ட் தேவாலய வெஸ்லியன் சபை, தமிழ் மாணவர் கழகம், சைவபரிபாலன சங்கம், ஆகிய ஏழு சங்கங்களின் ஆதரவிலும் மேற்படி தினம் 30-1-49 மாலை 3-30 மணிதொடக்கம் வதுளை பந்தய மைதானத்தில் கொண்டாடப்பட்டது. நகர சபைத் தலைவர் ஸ்ரீமான் எஸ். எச். அபயசேகர கூட்டத்துக்கு தலைமை வகித்தார். அகில இந்தியக் காங்கிரஸ் நிர்வாக சபையாரின் சர்வோதய தின அறிக்கை, வெஸ்லியன் சபை செயலாளர் திரு. எல். பர்னுன்டோ அவர்களால் ஆங்கிலத்திலும் புத்தவாலிபர் சங்கத் தலைவர் திரு. எஸ். ஏ. பீரிஸ் அவர்களால் சிங்களத்திலும் இலங்கை இந்திய காங்கிரஸ் தலைவர் திரு. ராம் கோபால் அவர்களால் தமிழிலும் வாசிக்கப்பட்டன. ஆரம்பத்தில் இலங்கை இந்திய காங்கிரஸ் செய்தியும் திரு. ராம்கோபால் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டது.

பின்பு புத்த குருமார் "பிரித்" ஓதினர்; கிறிஸ்தவ சபையினர் மகாத்மாவுக்கு விருப்பமான பைபிள் கீதங்கள் பாடினர்; முஸ்லீம் சங்கத்தினர் குர்-ஆனிலிருந்து சில பகுதிகளைப் படித்தனர். பின்பு இந்துசமய கீதங்களும் தேசீய கீதங்களும் பாடப்பெற்றன.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

சிறந்த பலனுக்கு

C. C. C. புகையிலைப்பசளை

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனியார்

இரண்டு விதமான வெவ்வேறு கலவைகள் எங்கனால் தயாரிக்கப்பட்டுக் கொடுக்கப்படுகின்றன. ஒன்று சப்புகிற புகையிலைக்கு வேண்டிய மாதிரியிற் பிரத்தியேகமாகக் கலவை செய்யப்படுகிறது. மற்றது சுருட்டுப் புகையிலை அல்லது குடி புகையிலைக்கு வேண்டிய மாதிரியில். இவ்விரு கலவைகளும் தோற்றத்தில் அதிக வித்தியாசமுடையவை. கமக்காரர்கள் தங்கள் தேவைக்கு எழுதும்போது தாங்கள் பசளையிடப்போகும் புகையிலை (மேலேகாட்டிய) எந்த வகையைச் சேர்ந்ததென விபரமாகக் கூறவேண்டும்

C. C. C.

கொழும்பு கொம்மேர்ஷல் கொம்பனி லிமிற்றெட்

[பெரிய பிரித்தானியாவில் சமுதாயமாக்கப்பட்டு, அங்கத்தவர்களின் உத்தரவாதம் மட்டுப்படுத்தப்பட்டது.]

விசேஷ ஆலோசனை இலவசமாகக் கூறப்படும். எங்கள் விசேஷ விற்பனை ஒழுங்குகளைப்பற்றியவிபரங்களுக்கு உடனே எழுதவும்.

The Colombo Commercial Company LIMITED.

INCORPORATED IN GREAT BRITAIN
LIABILITY OF MEMBERS Ltd.

(3577)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி பயிற்றல்

## பொது விதிகள்

அதிக காலமாகக் கல்வியின் நோக்கத்தைப் பல அறிஞர் ஆராய்ந்து கொண்டு வந்திருக்கின்றனர். அவர்களுட் பலரின் துணிபு, வாழ்க்கையின் பெறுபேற்றையும் தந்து அறிவினையும் ஊட்டுவதுதான் கல்வி என்பது. ஆனல், நாம் பலகால அனுபவத்தின முடிபினைக்கொண்டு காண்பது யாது? எல்லோருக்கும் அறிவு ஏறுவதற்கென ஊட்டிய கல்வியால் பயன்பட்டோர் நூற்று விகிதத்திற்கு எண்மரே. ஏனைய தொண்ணூற்றிருவரும் பயன்பெறுது அறிவினை வீணே ஆக்கிக் கொண்டவராகக் காணப்படுகின்றனர். ஆதலின், கல்வியின் நோக்கம், இக்கூடிய தொகையினருக்குப் பயனுள்ளதாகவும் வாழ்க்கைக்கு ஆதாரமானதாகவும் மாற்றி அமைக்கப்பட்டு வழங்கவேண்டியது அவசியம்.

போதனு முறையினும் சாதனையே பிரதானமானதெனப் பலர் முடிபுகொண்டிருப்பினும் இரண்டும் தொடர்புபட்டனவென்றே கூறல்வேண்டும். ஒன்று ஒன்றனுக்கு ஆதாரமாகும். சாதனை அவசியமே; ஆனல் போதனை முறையின்றி அது இயலாது. ஒரு யந்திரசாலையில் இருக்கும் மீகாமனுக்கு ஒருமோட்டோர் வண்டியின் பல்வேறு பாகங்களையும் அவற்றின் தொழிற்பாட்டையும் உபயோகத்தையும் பற்றி நன்கு தெரியும். அவர் அக்கல்வியில் தேர்ந்தவர். ஆனல், வண்டிபிழைபட்டவுடன் அதனைத் திருத்துபவர் அவரல்லர். அதனைத் திருத்தத் தெரிந்த ஓட்டிவிக்குப் பிழை எங்கே உண்டு என்றும், அதனைத் திருத்தி அமைப்பது எப்படி என்றும் தெரியும். ஆனல் முன்னைய அறிவு இவனுக்குக் கிடையாது. ஓட்டியார் அதனைக் குறிப்பாகக் காட்ட. இவன் மோட்டோரைத் திருப்பியோ முறுக்கியோ சுழற்றியோ திருத்தி விடுகின்றுன். ஆதலின், சாதனையும் போதனையும் அவசியமே.

கல்லால மரநீழலில் நால்வர்க்கு ஓதியதல்லவோ போதனை. அதுவன்றே பரமஞானம்! அதுவன்றே வாழ்க்கையைப் புதுக்கியும் திருத்தியும் அமைப்பது. நம் சாதனை முறைகளைப் புதுவதாக்குவதும் போதனையே.

உதாரணமாக.—

அணுக்குண்டினைப் பற்றிய அறிவு, சில ஆண்டுகளுக்கு முன் மனிதனின் மூளையில் இருந்தது. ஆனல், அது உருவெடுத்தது இப்பொழுதுதான். அறிவானது சாதனையாதற்கு முன் பரீட்சையும் தோல்வியும் ஆகி, பின்புதான் உருவாகின்றது. ஆதலின், அறிவும் பெறுபேறும் மிகுந்த தொடர்வுபட்டன என்க. ஒரு வைத்தியர் வைத்திய அறிவினைப் பெற்றுக்கொண்டு நோயாளியைச் சோதித்து மருந்துகொடுக்கின்றுர். அப்படியே ஓர் ஆசிரியரும் அறிவினைப் பெற்றுக்கொண்டு, சிறுபிள்ளையைக் கற்பிக்கத் தொடங்கல் வேண்டும். இல்லாவிட்டால், அவர் குழந்தையின் அறிவுவிருத்தியைக் கெடுத்து விடுவார்தான். 20 வருட அனுபவம் பெற்றுவிட்டதாக ஒரு ஆசிரியர் சொன்னல் அது பிழையாகும். ஒருவருட அனுபவத்தையே அவர் இருபதுதரம் திருப்பித் திருப்பித் தாடனமாக்கி வீணே கழித்ததுதான் பெறுபேறு ஆகலின், போதனையும் இன்றியமையாதது.

— அ. வி. ம. —

இவை, இரண்டு தனித்தனிப் பொருட்கள் அல்ல, ஒரு பொருளின் இரு அம்சங்கள் என்று கொள்ளல் வேண்டும். கல்வியை, ஒய்வு நேரக்கல்வியாக மாற்றி, உள்ள ஆராய்வோடு வழங்குதல் வேண்டும்.

இனி, கல்வியை ஒரு குழந்தை எப்படிப் பெறுகின்றுன் என்று பார்ப்போம். அவனுக்குப்பாடசாலை இருக்கின்றது; பெரிய உலகமும் இருக்கின்றது. நான்கு ஐந்து வயது தொடங்கி பதினறு பதினேழு வயது வரையும் ஒருநாளுக்கு ஐந்து மணி நேர விதம் அவன் பாடசாலையிற் செலவிடுகின்றுன். எஞ்சிய நேரம் எல்லாம் வீட்டிலும் கிராமத்திலும் சுற்றத்தாரோடும் சினேகிதரோடும் வாழ்வதால் அவனுடைய அறிவின் ஏற்றம், பாடசாலையாற் சிறுபங்கும் சுற்றத்தாற் பெரும் பங்குமாக வந்து சேருகின்றது. ஒருவனுடைய புருஷத்துவத்தை விருத்தி செய்வது எதுவும் கல்வியே. மேலும், அது எந்தத் துறையிலிருந்தும் கிடைக்கலாம். படமாளிகையும், பரதேச யாத்திரையும், வாசிகசாலையும், வானெலியும் பாட்டுப் பெட்டியும், கோயில் குளமும் — எல்லாம் — இக் கல்வியைக் கொடுக்கலாம். மாணவனுன காலத்தில் ஒரு பிள்ளை நூற்றுக்கு எட்டு விகிதநேரமே பாடசாலையில் இருக்கிறுன். எஞ்சிய நேரம் முழுவதும் சூழலே அவனுக்குக் கல்வி ஊட்டுகின்றது. ஆதலின், பிள்ளை கெட்ட நடத்தை உடையானென்றே கெட்ட பேச்சுடையானென்றே ஆசிரியரைக் குறைகூறல் பிழை. அந்தப் பழக்கத்தை அவன் வீட்டிற் பழகியிருக்கக் கூடும். தெருவிலும் பழகியிருக்கக்கூடும்.

ஆறறிவு படைத்த மனிதனுக்குக் கல்வியின் நோக்கம், என்றும் ஒன்றேதான். அவன் நல்ல வாழ்க்கை வாழ்ந்து, சமூகத்தைத் தன் புருஷத்துவத்தால் உயர்த்தி விடுவதுதான் நோக்கம். இதற்கு, உண்மையான, சந்தோஷமான, ஒரு வாழ்க்கை வாழல் வேண்டும். காலத்திற்குக்காலம்—ஓய்வு நேரத்திற்கே கல்வி என்றும், சமயத்திற்கே கல்வி என்றும், தேசத்திற்கே கல்வி என்றும், விஞ்ஞானத்திற்கே கல்வி என்றும் மாறிமாறிப் பல கொள்கைகள் அறிவாளிகளிடம் தோன்றினவாயினும் அதன் அடிப்படையான நோக்கம் ஒன்றேயாக விருந்தது. இப்போதும் அப்படியே இருக்கின்றது. எனினும் தற்காலம் குணம் நடை என்பன சிறிது கவனிக்கப்படுகின்றன. மனிதன் சமூகத்திற்காக ஆயதத்ம் செய்யப்படுகின்றுன்!

(தொடரும்)

# மகாத்மா காந்திக்கு அஞ்சலி

[நாமக்கல் கவிஞர்] 30-1-49

காந்தியென்னும் பேரொளியே! கருணைபொழி வான்முகிலே
சாந்திநிறை பாத்திரமே! சன்மார்க்க சாஸ்திரமே!
மாந்தருக்குள் மாமணியே மாநிலத்தின் அற்புதமே!
ஏந்துபுகழ் மோகனமே! என்சொல்லி அஞ்சலிப்போம். 1.

இதமுரைக்கும் வானெலியே! இருள்கிழிக்கும் மின்விளக்கே!
பதமறிந்த பேச்சாளா! பயனறிந்த எழுத்தாளா;
மதவெறிக்கே பலிபுகுந்த மாயாப் பெரும்புகழே
அதிஉரைக்கச்சொல்லறியோம் துணைபுரிவாய் அஞ்சலித்தோம். 2.

அன்பெடுத்த திருவுருவே! அருள்அமரும் ஆசனமே!
துன்பமுற்றோர் துணைக்கரமே! அயர்வீக்கும் தூதுவனே!
இன்பமெல்லாம் பிறர்க்குதவி இன்னலெல்லாம் தாங்கிநிற்கும்
தெம்பிருக்கும் தேசிகமே! திருவடிக்கே அஞ்சலித்தோம். 3.

இல்லறத்தின் சிறப்பிடமே துறவறத்தின் இருப்பிடமே!
நல்லறங்கள் யாவினுக்கும் நடுவான நன்னெறியே!
தொல்லறத்தின் புதுப்பதிப்பே! தோல்வியில்லா சால்பிடமே!
சொல்உரைக்கப் போதாத சுசிகரமே! தொழுகின்றேம். 4.

சாதிமத பேதமில்லா சமதர்ம சந்நிதியே!
நீதிநெறி பிசகாமல் நிறுத்தளக்கும் துலைக்கோலே!
வாதுபுரி வம்புகளின் வாயடக்கும் வல்லமையே!
ஏதுபுகழ் சொல்லியுன்னை அஞ்சலிப்போம் எம்மானே! 5.

வலிமைதரும் சூரியனே! வழிகாட்டும் தாரகையே!
குலவவரும் சந்திரனே! குளிர்ச்சிதரும் மென்காற்றே!
புலமைதரும் பொன்மொழியே! புதுமைதரும் நன்மருந்தே!
தலமறிந்த தனித்தலைவா! தாள்பணிந்து அஞ்சலித்தோம். 6.

மதிகலங்கா மந்திரியே! மாசுபடாத் தந்திரியே!
சுதிகலங்கா யாழிசையே! சுவைகுறையாச் சொல்லடுக்கே!
நிதிமயக்கா மனநிறைவே! நிலைகலங்கா நிம்மதியே!
கதிகலங்கா சாரதியே! அஞ்சலித்தோம் காத்தருள்வாய். 7.

தேடரிய செல்வமே! தெவிட்டாத தெள்ளமுதே!
ஏடறியா ஞானமே! எழுத்தறியா வித்தகமே!
பாடறியா உழைப்பே! பயன்கருதாத் திருப்பணியே!
ஈடறியா உத்தமனே! என்சொல்லி அஞ்சலிப்போம். 8.

மண்கண்ட மாதவமே! மறைகண்ட சாதகமே!
கண்கண்ட தெய்வமே! கலைகண்ட நல்லுணர்வே
பண்கொண்ட இன்சொல்லே! பணிகொள்ளும் நன்னயமே
எண்கொள்ளா மேதையே! என்சொல்லி அஞ்சலிப்போம். 9.

கல்விதரும் நல்லறிவே கவிதைதரும் கற்பனையே!
செல்வமென்னும் பொருளெல்லாம் சேர்ந்திருக்கும்பொக்கிஷமே
நல்வினைக்கு நாயகமே! நடுநிலையின் தாயகமே!
சொல்வதற்கு வேறறியோம் காந்தியரே தொழுகின்றேம். 10.

பகைமைபுகா அரண்மனையே! படைதொடுக்கா ராணுவமே!
புகையறியாச் சுடர்விளக்கே! புண்படுத்தாத் தவக்கனலே!
வகையறியா மானிடர்க்கு வரமளிக்கும் நல்வாழ்வே!
தொகையறியாப் பொறுமையே! தொழுகின்றேம் துணைபுரிவாய். 11.

கொலைமறுத்த போர்வீரா! குடிஒழித்த பேராளா!
நிலைஇழிந்த ஹரிஜனங்கள் நிமிர்ந்துலவும் முதுகெலும்பே!
கலைமறந்த குடிசைகளை காக்கவந்த கைத்தொழிலே!
அலையறந்த குணக்கடலே! காந்தியரே அஞ்சலித்தோம். 12.

மரணமெனும் பெரும்பயத்தை மாற்றிவிட்ட மந்திரமே!
இரணமென மதித்துயிரை ஈடுவைக்கும் பெருந்தீரா!
தருணமதில் வந்துதவி வெற்றிதரும் தைரியமே!
காரணமெல்லாம் உன்வசமாய்க் கைகுவித்தோம் காத்தருள்வாய். 13.

ஏழைகளின் பெருந்துணையே! எளியவரின் நல்லுறவே!
மேழியரின் மெய்க்காப்பே! மெலிந்தவரின் புகலிடமே!
ஊழியரின் ஊழியனுய் உலகைவென்ற ஒப்புரவே!
வாழியஉன் திருநாமம் வையமெங்கும் வாழ்வுதரும். 14.

# இறைவன் உறைவிடம்

## அன்பே அடிப்படை

ஒரு தலை அன்பு முயற்சித்தத்வம் என்பதுபற்றி பிரதம தேசாதிபதி ஸ்ரீ ஸி. இராஜகோபாலாச்சாரி ஹரிஜன் பத்திரிகையில் ஓர் கட்டுரை எழுதியுள்ளர். இவர் கூறுவதாவது:—"ரொக்கெட் என்னும் வெடிகள் மேலே சுவாலையாக எழுந்தும் பிரகாசித்த பிறகு மேகமண்டலத்தில் மறைவதை நாம் எல்லோரும் கண்டிருக்கிறேம். கொஞ்சநேரம் இதை ஆகாயத்திற் பார்த்துக்கொண்டு நிற்கிறேம். பிறகு எல்லாம் சூன்யமாகிவிடுகிறது. இதேபோன்று பாபு மறைந்துவிட்டார். 12 மாதங்களுக்கு முன் இவர் இணையற்ற புகழடைந்திருந்தார். இப்புகழ் இருந்த இடத்திற் கரும் புள்ளிகளை விட்டுச் சென்றுவிட்டார். 1947 முடிவிற்றான் இந்தியா விடுதலை பெற்றது. ஆனல் மோசமான துரதிஷ்டத்திற்கும் மனக்கசப்புக்கும் இலக்காயிற்று. இது "பாபு" வுக்கு மிகவும் மனக்கஷ்டத்தை அளித்தது. இச்சமயம் தான் இவர் பூரண கீர்த்தியில் எழுந்தார்.

28 வருட காலமாக இவரிடம் எனக்கு மிக்க மரியாதையும் அன்பும் இருந்து வந்தது. ஆனல் 1947 ன் கடைசி மாதங்களிற்றான் இவர்பால் [illegible] பக்தி உச்ச நிலையை [illegible] பிடித்தது.

"நான் சொல்வதை நீர் ஒப்புக்கொள்கிறீரா? ஒருதலை அன்புமுயற்சித்தத்வத்தை நீர ஏற்றுக்கொள்கிறீரா" என்று அவர் ஓர்நாள் என்னிடம் கேட்டார்.

"வேறு வழியே கிடையாது" என்று தயக்கமின்றி உற்சாகத்தோடு நான் பதிலளித்தேன்.

"ஆம்" என்று இவர் முகமலர்ச்சியோடு ஆமோதித்தார்.

இவர் கூறியதை நான் ஏற்றுக்கொள்ளும் போதெல்லாம் இவருக்கு அளவு கடந்த மகிழ்ச்சி ஏற்பட்டுவிடும் "பதில் என்னவாயிருக்கும்? மற்றக் கட்சி ஒத்துழைக்காவிடில் என்ன பிரயோசனம்?" என்ற கேள்விகள் எல்லாம் அனுவசியமானதாக மறைந்துவிடும்.

பாபுவின் வாழ்க்கைத்தத்வமும், நடபடிக்கைகளும் இதுவேயாகும். இதைச் சிலர் உணர்ந்தனர். ஆனல் இப்பொழுது தான் இத்தத்துவத்தில் அதிக நம்பிக்கை ஏற்பட்டிருக்கிறது.

'ரொக்கெட்' வெடி 1948 ஜன. 30உ வெடித்தது. என்ன அற்புதமான ஒளி வீசிற்று! இப்பொழுது எல்லாம் இருளாகிவிட்டது.

கடவுளிடம் நமக்கு நம்பிக்கை [illegible] முடியும். உயிருள்ள ஜீவனிற் கடவுள் இருப்பதாக கூறப்பட்டிருக்கிறது. இது உண்மையாகில் அன்பு, உதவி, அனுதாபம் முதலிய குணங்கள் இருக்குமிடத்துக் கடவுளைப் பிரதயட்சமாக காணுகிறேம். அன்பு மறைந்தாற் கடவுளும் மறைந்து விடுகிறார்.

அன்பிலே கடவுளைக் காண்போமாக. இவ்விதம் செய்தாற் பெரிய கஷ்டங்களும் எளிதாகிவிடும்.

அஹிம்சை விசேஷ அடைமொழிகளாகும். ஒருதலைப்பட்சமான அன்புதான அடிப்படைத் தேவையாகும். நமது சிந்தனைகளும், நடபடிக்கைகளும் அன்பிற் சேர்ந்திருக்க வேண்டும். ஒருதலை அன்பின் ஒவ்வொரு முயற்சியும் பாபுவுக்குச் சிரார்த்த விழாவாகவே இருக்கும்.

## சென்னைக் கம்பர் கழகம்

சென்னைக் கம்பர் கழகம் கடந்தசில வருடங்களாகக் கம்பரின் புகழைத் தமிழ் நாடெங்கும் பரப்பும் பணியில் உழைத்து வருகின்றது. இக் கழகத்தைப் பதிவு செய்வது அவசிய மெனக் கண்டு அதற்கான சட்டதிட்டங்களைத் தயாரித்துள்ளனர்.

நோக்கங்கள் அத்தனையும் வரவேற்கத்தக்கன. சட்டங்களைப்பற்றி ஆலோசிக்கக் கம்பர் அன்பர்களின் கூட்டம் ஒன்று அண்மையில் நடைபெறும்.

இக்கழகத்தின் தலைவராகக் கல்கி ஆசிரியர் ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பணியாற்றுகின்றார்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உலக விவகாரம்

# ஸ்டாலின் அசைகின்றார்!

## ட்ருமன் இசைவாரா?

அமெரிக்காவும், ருஷியாவும் விரைவில மோதிக் கொள்ளக்கூடுமென்ற அபிப்பிராயம் ஒன்று சமீபகாலத்தில் எழுந்துள்ளது. ஆனால், சில தினங்களுக்கு முன்னர் ஸ்டாலின் அமெரிக்காவிலுள்ள செய்தி ஸ்தாபனமொன்றுக்கு அளித்த பதிலில் இருந்து அவர் சமாதானத்தைப் பெரிதும் விரும்புகின்றார் என்பது நன்கு புலனாகின்றது.

யுத்தத்தை நிறுத்துவதற்கென அமெரிக்காவுடன் சேர்ந்து கூட்டறிக்கைவிட ருஷியா தயாராக இருக்கின்றதெனவும், உலக சமாதான ஒப்பந்தம் ஒன்று செய்வதற்காக ஜனாதிபதி ட்ருமனைச் சந்தித்துப்பேசத் தாம் தயாராக இருப்பதாகவும் ஸ்டாலின் தெரிவித்திருக்கின்றார்.

ஆயுத பரிகரண ஏற்பாடுகளைப் படிப்படியாக நடைமுறைக்குக் கொண்டுவரும் விஷயத்திலும் அமெரிக்காவுடன் ஒத்துழைக்க ருஷியா ஆயத்தமாக இருக்கின்றது.

### நிபந்தனைகள்

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், ஆகிய மூன்று தேசங்களும் மேற்கு ஜேர்மனிக்கெனத் தனி இராச்சியம் அமைக்கும் முயற்சியைக் கைவிடும் பட்சத்தில், பேர்லின் முற்றுக்கையை நீக்குவதில் ருஷியாவுக்கு எவ்வித ஆட்சேபமுமில்லை யெனவும் ஸ்டாலின் கூறியுள்ளார். அத்துடன் சோவியத்து நடவடிக்கைக்கு எதிராக மேற்றிசை வல்லரசுகள் நடாத்திவரும் முற்றுக்கையும் நீக்கப்படவேண்டுமெனவும் அவர் தெரிவிக்கின்றார்.

ஸ்டாலின் வெளியிட்டுள்ள இக் கருத்துக்களை ருஷிய மக்கள் வரவேற்கின்றனர். அமெரிக்காதான் உலக சமாதானத்துக்குக் குறுக்கே நிற்கின்றதென ருஷிய மக்கள் எண்ணி வந்தனர். ஆகவே, ஸ்டாலின் வெளியிட்டுள்ள பிரகடனத்தைக் கண்டபின் ருஷியாவே சமாதானத்தை நிலைநாட்ட முனைந்து நிற்கின்றதென்ற அவர்களுடைய அபிப்பிராயம் மேலும் உறுதியாகிக்கொண்டது. ட்ருமன் இச் சமாதானக் கோரிக்கையை நிராகரித்துவிட முடியாதென்பதே ருஷிய மக்களின் கருத்தாகின்றது.

### உவாலஸ் திட்டம்

ஸ்டாலின் சமாதானப் பேச்சு நடாத்துவதுபற்றி ஹென்றி உவாலஸ் அவர்களுக்கும் முன்பு சில கோரிக்கைகளைச் சமர்ப்பித்திருந்தார். அவற்றை அடிப்படையாகக் கொண்டே ஸ்டாலின் இம்முறையும் ட்ருமனுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்துவாரென அறியக் கிடக்கின்றது. முந்திய கோரிக்கைகள் வருமாறு :—

1. அணுச்சக்தி ஆயுதங்களைத் தடைசெய்தல். ஆயுத பரிகரணம் ஏற்படவேண்டும்.

2. ஜப்பான், ஜேர்மன் சமாதான ஒப்பந்தங்கள் உறுதியாகவேண்டும்.

3. ஜேர்மனி, ஜப்பான், சீனம் கொரியா ஆகியாம் நாடுகளிலிருந்து துருப்புகள் வெளியேறவேண்டும்.

4. தனித்தனி தேசங்களின் ஆதிபத்தியத்தைக் கௌரவிக்கவேண்டும். அத்தேசங்களின் உள்நாட்டு விவகாரங்களிலே தலையிடக்கூடாது.

5. நேசஸ்தாபனத்தில் அங்கத்துவம் வகிக்கும் நாடுகளில இராணுவத்தளங்கள் நிறுவப்படுவது அனுமதிக்கத் தக்கதன்று.

6. சர்வதேச வர்த்தகத்தை அபிவிருத்தி செய்ய வேண்டும். இதில் எவ்வித வேற்றுமையும் ஏற்படக்கூடாது.

7. யுத்தத்தால் இடர்ப்படும் நாடுகளின் சீரமைப்புக்காகப் பொருளாதார உதவி செய்தல் வேண்டும்.

8. ஜனநாயகம் பாதுகாக்கப்படல்வேண்டும். சகல நாடுகளிலும் மக்களுக்குரித்தான உரிமைகளைக் காப்பாற்ற வேண்டும்.

### சந்திப்பார்களா

ஸ்டாலினும், ட்ருமனும் சந்தித்துப் பேசுவதற்கு இணங்கியிருப்பதிலிருந்து மூன்றாவது உலக யுத்தம் விரைவில் ஏற்படமாட்டாதென்பது மட்டும் ஓரளவுக்கு ஆறுதலைக் கொடுக்கின்றது. அமெரிக்காவும் ருஷியாவும் ஒருவரை ஒருவர் வெருட்டிக் காரியம் பார்க்கலாமென எண்ணி வந்தனர். அணுக்குண்டைக்காட்டி அமெரிக்காவும், ஐந்தாம்படை இராஜதந்திரத்தைக்காட்டி ருஷியாவும் உலகத்தைப் பயமுறுத்தி வருகின்றனர். இது சாத்தியப்படமாட்டாதென்பதைச் சமீபத்தில் நடைபெற்ற 19 நாடுகளின் ஆசிய மகாநாடும் மேற்றிசை நாடுகளுக்கு உணர்த்திவைத்திருக்கின்றது.

தவிர, ருஷியாவின் ஆணைப்படி நடக்க முடியாதென்பதை யுகோஸ்லாவிலுள்ள கொம்யூனிஸ்டுகள் நடந்துகொண்டனர் இது ருஷியாவுக்கு ஒரு விழுக்காடாகும்.

### சீனத்தின் பாடம்

இங்கிலையிற் சீனத்திற் கொம்யூனிஸ்டுகள் பெறும் வெற்றியைக் கண்டு உலகம் திடுக்கிடக் கூடும். ஆனால் அங்கு பரவிவரும் கொம்யூனிஸம் ருஷிய நகரத்தைச் சேர்ந்த தன்றெனச் சிலர் கூறுகின்றனர். சீனத்து மக்களின் ஆதரவைப் பெற்றுவரும் சீனத்துக் கொம்யூனிஸ்டுகள் தேசியச் சுதந்திரத்துக்குப் பங்கம் விளைக்கமாட்டார்களெனவே கருதவேண்டியிருக்கின்றது. பணக்கார வர்க்கத்தின் ஆலோசனைகளைக் கேட்காது, மாற்றங்களை விரும்பாத, ஷியாங்கை ஷேக் படித்துள்ள பாடமானது அவரைப் போன்ற ஏனையோருக்கும் ஒரு சரியான படிப்பனையாகும்.

சீனத்துத் தற்காலிகத் தலைவரான தளபதி லீசுங்ஜென் ஸ்ரீமதி ஸன்யாட் ஸென் அவர்களின் உதவியை நாடுகின்றார். சீனத்துக் குடியரசை ஸ்தாபித்த ஸன்யாட்ஸென் அவர்களின் மனைவியாகிய ஸ்ரீமதி ஸன்யாட்ஸென் சீனத்து அரசாங்கத்தின் சார்பில் கொம்யூனிஸ்டுகளுடன் பேசி ஒரு முடிவுக்கு வரவேண்டுமென லீ சுங்ஜென் கருதுகின்றாராம்.

### சமாதானப் பாசாங்கு?

சமாதானத்துக்கான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாக இருக்கும் வேளையில், முரண்பாடான பிரச்சினைகளைக் கிளப்பி விடுவதிற் கொம்யூனிஸ்டுகள் பிடிவாதமாக இருப்பார்களானால் அவர்களுடன் சீனத்து அரசாங்கம் இணங்கிச் செல்வது முடியாத காரியமாகிவிடும்.

சமாதானம், சமாதானம், என்று பாசாங்கு செய்துகொண்டே, யாங்ஸி நதிக்குத் தெற்கே ஒரு இலட்சம்பேர் கொண்ட பெரிய இராணுவப் படையை நிர்மாணிக்கச் சீனத்துத் தேசிய அரசாங்கம் திட்ட மிட்டிருக்கின்றதெனக் கொம்யூனிஸ்டுகள் குற்றஞ்சாட்டுகின்றனராம்.

நாங்கிங், ஷாங்ஹாய் என்பன பாதுகாக்கப்படுவதற்கான திட்டங்களை வகுத்துக் கொடுத்த பின்னரே ஷியாங் கேஷேக் நாங்கிங் நகரிலிருந்து வெளியேறினர் என்றும் கொம்யூனிஸ்டடுகள் குறை கூறுகின்றனர்.

### தென்னாபிரிக்கா

தென்னாபிரிக்காவின் தேசிய அரசாங்கத்து இனவெறிக் கொள்கையையும், பொருளாதாரக் கொள்கையையும் ஆட்சேபித்துத் தளபதி ஸ்மட்ஸ் தென்னாபிரிக்கச் சட்டசபையிற் சமர்ப்பித்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் தோல்வியுற்றது.

### டச்சு மௌனம்

இந்தோனேஷியா சம்பந்தமாகப் பாதுகாப்புச் சபையில் நிறைவேறிய தீர்மானத்துக்கு டச்சு அரசாங்கத்திடமிருந்தும் எவ்வித பதிலும் பட்டேவியாவுக்கு எட்டவில்லை.

### இஸ்ரவேல் இராச்சியம்

பாலஸ்தினத்தில் ஏற்பட்டுள்ள இஸ்ரவேல் இராச்சியத்தைப் பிரிட்டன் அங்கீகரிக்கத் தீர்மானித்துவிட்டது. ஆனால் அந்த இராச்சியத்தின் எல்லையை மட்டும் பிரிட்டன் அங்கீகரிக்கவில்லை யெனத் தெரிகின்றது.

# அரக்கனை ஏய்த்த வீரன்

**அயர்லாந்தில் இன்றும் மாணவர்களுக்கென வழங்கி வரும் ஒரு பழங் கதையை ஸ்ரீ. எஸ். ஆர். அனந்தநாராயணன் தமிழில் எழுதியுள்ளார்.**

அயர்லாந்தின் தென் மேற்கில் டிங்கிள் (Dingle) என்னும் பெயருள்ள ஒரு தீவு உண்டு. அங்கு முன்னாளில் பின்-மக்கூல் (Finn Maccool) என்னும் ஒரு மகா வீரன் இருந்தான். அவன் தனது ஆட்களுடன் அங்குள்ள கார்க்க-கினனி (corkaguiny) யென்னும் காட்டில் விளையாடுவது வழக்கம். இந்த மக்கூலும் அவனது ஆட்களும், அக்காலத்தில் உலகத்திலேயே மகா வீரர்கள் எனப் பெயர் பெற்றிருந்தனர்.

அப்போது ஸ்பெயின் தேசத்திலும், பர்வதம் போற் பருத்த ஒரு பெரிய அரக்கன் இருந்தான். அவன், "இந்த மக்கூலும் அவனது ஆட்களும் அவ்வளவு பெரியவர்கள் தானா? அதை நேரில் பார்த்துவிடவேண்டும்!" என்று எண்ணி அயர்லாந்துக்குப் புறப்பட்டான். இந்த அரக்கன் ஒரு "பெருந்தேகி" யென்பதில் சிறிதும் ஐயமில்லை. அவனது தலை மேகமண்டலத்தையும் பிளந்துகொண்டு சென்றது. சமுத்திரத்தின் ஆழமான பாகங்களும் அவனது கணுக்காலுக்குத் தான் இருந்தன. அவன் பிஸ்கே விரிகுடாவிலிருந்து வென்ட்றித் துறைமுகத்தில் தனது காலை எட்டிவைத்த பொழுது, மக்கூலையே சந்தித்தான்!

அவனைக் கண்டபொழுது, அயர்லாந்திலேயே அதி தைரியசாலியான மக்கூலுக்கும் திகில் உண்டாகிவிட்டது! அவ்வளவு பருமனான தேகத்தை, மக்கூல் அதுவரை கண்டதேயில்லை! என்றாலும், "இப்புதிய ஆள் யார்? அவனது நோக்கம் என்ன?" என்று அறியும் முன், தான் இன்னான் என உரைக்கலாகாது, என்று அவன் மௌனமாகவிருந்தான்.

இவன் இன்னான், என அறிந்திராத ஸ்பெயின் தேசத்து அரக்கனும், இவனை நோக்கி, "பின்-மக்கூலின் வீடு எங்கே?" என்று கேட்டான்.

இவன், "பின்-மக்கூல் வீட்டில் இல்லையே!" என்று சொல்லிவிட்டு, அவ் வீட்டுக்குச் செல்வதற்கு றஹினேன் என்னும் சந்தின் வழியாகவுள்ள ஒரு சுற்று வழியைக் காட்டிவிட்டு, ஒரு சுருக்கு வழியாகச் சென்று, அரக்கன் வருவதற்கு நெடு நேரம் முன்னதாகவே தனது வீட்டை அடைந்துவிட்டான்!! அப்போது அவனது மனைவியானவள் சிற்றுண்டிக்காகத் அப்பம் வார்த்துக்கொண்டிருந்தாள்.

அதைக் கண்டு அவன், 'இந்தத் அப்பத்தில் நல்ல பெருங் கற்களைக் கலந்துவார்; ஒரு பெருத்த அரக்கன் இங்கு வருவான்; அவன் வந்த பின் சமயோசிதம்போல் உனது கெட்டிக்காரத்தனத்தையும் காட்டு! என்றான்.

அரக்கனும் வந்தான்.

அவனை மக்கூலின் மனைவி அதிவினயமாய் வரவேற்றாள். அவன் ஸ்பெயின் தேசத்தவனாயிருந்தாலென்ன? இங்கிலாந்திலிருந்து வந்தவனாயின் என்ன? அல்லது ஏழு கடல்களுக்கும் அப்பாலிருந்து வந்தாற்றான் என்ன? அவனை முறைப்படி வரவேற்று உபசரிக்க வேண்டியது நியாயந் தானே!

அவள், அப்போது வார்த்துக்கொண்டிருந்த அப்பத்திலிருந்து ஒருசிறிது விண்டு, அதை அவனிடம் கொடுத்து, "இது உமக்கென்று விசேஷமாகச் செய்யவில்லை; மக்கூலும் அவரது ஆட்களும், இதைத்தான் வழக்கமாக இரண்டாந்தரத்துக்கு எடுத்துக் கொள்வார்கள். நீர் வருவதாக முன்னடியே சொல்லியனுப்பியிருந்தால், வாய்க்கு ருசியும் புஷ்டியுமான பக்ஷணம் ஏதாயினும் தயார் செய்திருப்பேன்; உமக்கு இதைத் தரவேண்டுமே யென்று எனக்கு மிகவும் வேதனையாயிருக்கின்றது!" என்று நொந்துகொண்டாள்.

அரக்கன் அப்பத்தைக் கடித்தான். பற்கள் கற்களைக் கடித்தன—அக்கற்கள் அதிபிரமாண்டமாக விருந்தன. அவை பருமனாயுமிருந்தன! அப்போது அந்த அரக்கன் 'இத்தகைய அப்பத்தை உண்ணும் மனிதர்கள் அதி புஷ்டியும் சக்தியும் படைத்தவர்களாகவே யிருப்பார்கள்! நான் கேள்விப்பட்டபடி மகா பலசாலிகளாகத்தான் இருப்பார்கள்!' என்று நினைத்தான்.

அதன்பின் அந்த அரக்கன், மக்கூலின் மனைவியை நோக்கி, "மக்கூலும் அவனது ஆட்களும் தங்களது உடலின் வலிகுன்றாம லிருப்பதற்காகவும், அதைப் பேணி வளர்ப்பதற்கும் என்னென்ன அப்பியாசங்கள் செய்வார்கள்?" எனக் கேட்டான். அவள், "வடக்கிலிருந்து காற்று அடிக்கையில், மக்கூலும் அவரது ஆட்களும் ஒவ்வொருவரும், தனித்தனியாக இவ்வீட்டின் இருபுறங்களின் ஓரங்களை ஓரோர் கைகொண்டு பிடித்து, இதைத் தெற்கு முகமாகத் திருப்புவார்கள்" என்றாள்.

அதைக் கேட்டபொழுது அரக்கன் திடுக்கிட்டே போய் விட்டான்! அந்த வீடு சாமானியமானதல்ல, விவிலிய வேத நூலிற் குறிப்பிட்டுள்ள ஷீபா ராணியின் (Queen of Sheba) பிரம்மாண்டமான அரண்மனையைக் காட்டிலும இது பத்து மடங்கு பெரிதாக விருந்தது! பின்னும் அவள் "அதன்பின் அவர்கள் ஒரு சிறு குன்றைப்போல் பருத்த ஒரு பாறையைப் பிளந்து பற்றியெடுத்து, வீட்டின்மேல் எறிந்து ஆடுவார்கள். ஒவ்வொருவனும் அதைத் தனது கால் கட்டை விரலின் மேல் வைத்து எறிவான்; அது வீட்டின் மறுபுறம் விழுமுன் அங்கு ஓடிச் சென்று அதே கட்டை விரலின்மேல் ஏந்திப் பிடித்துக்கொள்ளுவான்" என்றாள்.

இதைக் கேட்ட அந்த அரக்கன், தனது கைகளால் அந்த வீட்டை அசைக்க முயன்றான். ஆனால் அது அரைவாசிதான் அகன்றது. அதன்பின் அவன் அங்கிருந்த பாறையைச் சுழற்றி யெறிந்தான். அது கீழே வருமுன் அதைப் பிடிப்பதற்கு வீட்டின் பின் ஓடிச்செல்ல அவனால் இயலாமற் போயிற்று. அப்போது அவன், "இவ்வாறான காரியங்களைச் செய்யக்கூடிய மனிதர்கள், தான் கேள்வியுற்றிருந்த பிரகாரம், மஹா பலசாலிகளாகத்தான் இருத்தல் வேண்டும்! பலங்

(தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்தின் பொருள்

சுதந்திரதினம் வந்து போய்விட்டது. இனி அடுத்த வருடம் 4-ந் திகதி இத்தினத்தை மீண்டும் சகல ஆடம்பரங்களுடனும் இலங்கை மக்கள் கொண்டாடுவார்கள்.

தேசியம், சுதந்திரம் என்ற பதங்கள் அரசியல் வாதிகளின் பிரசுரத்தால் அகில உலகிலும் இன்று நன்கு அடிபட்டு வருகின்றன. இலங்கையிலும் இப்பதங்களுக்கு நல்ல செல்வாக்கு இருக்கின்றன. தேசியப் பண்பாடு, தேசியக் கலை, தேசியநிதி, தேசியப் பத்திரிகைகள் என்று கௌரவமாகப் பேசிக்கொள்ளுகின்றோம். இவற்றினும் மேலாக ஐக்கிய தேசியக்கட்சி என்ற அரசியற்கட்சியே இன்று அரசியலை நடாத்திவருவதையும் காண்கின்றோம். ஆம், சுதந்திர இலங்கையில் தேசிய ஆட்சி தலைதூக்கி நிற்கின்றதாம்!

## சுகவாழ்வு

இந்தச் சுதந்திரம் என்ற பதத்தின் பொருள்தான் என்ன? "எமது செல்வத்துக்கும் சுகவாழ்வுக்கும் இனி ஒரு கணமேனும் பிறர் கையைப் பார்த்து நிற்கக்கூடாது. இதுவே சுதந்திரத்தின் சிறந்த பொருளாகும்" இவ்வாறு சமீப காலத்தில் இந்தியாவின் பிரதம தேசாதிபதியான ஸ்ரீ ஸி. இராஜகோபாலாச்சாரியார் குறிப்பிட்டிருந்தார். சுதந்திரம் பெறுவதற்கு அரும் பாடு பட்ட ஒரு பழம் பெரு நாட்டின் சக்கரவர்த்தி, கண்ணினும் இனிய சுதந்திரத்தைப் பற்றிக் கூறும்போது அதை அனுபவ ஞானியின் அமுத வாக்கியமாகவே நாம் கொள்ள வேண்டும்.

இனி, சுதந்திர இந்தியாவின் பிரதமரான நேருஜீ இதுபற்றிக் கூறுவதைக் கவனிப்போம். "வீர சுதந்திரம் பெற்ற பெருமக்களாகத் தலை நிமிர்ந்து நிற்கவேண்டுமாயின், நாங்கள் நிலை தளம்புதல் கூடாது. அத்துடன் ஒற்றுமையாக நின்று, அற்ப விஷயங்கள் தலை நீட்டினாலும் அவற்றை ஆட்கொள்ளவேண்டும். வெளியிலே எமக்கு எதிரிகள் ஒருவரும் இல்லை சொந்த நாட்டிற்றான் அவர்கள் இருந்து வருகின்றனர்"

அருமையான இக்கருத்துக்கள் இந்தியாவுக்குமட்டும் உரித்தானவையன்று. உலகில் உள்ள நாடுகள் அனைத்தும் இவ்வாக்கியங்களின் உட்கருத்தை அலசி ஆராயவேண்டும். அதுவும், ஓராண்டுச் சுதந்திரத்தைக் கொண்டாடிக் களி பேருவகையுற்றுள்ள ஸ்ரீலங்கா இந்தியாவின் சுதந்திரச் சிற்பிகள் இருவர் கூறிய வாக்கியங்களைச் சிரமேற் கொண்டு ஒழுகவேண்டியது மிக அவசியமாகின்றது.

## நல்ல அரசாங்கம்

சுயாட்சிக்குப் பதிலாக நல்ல ஆட்சி ஒன்று ஏற்பட்டுவிட்டால் அதையிட்டுத் திருப்தியடைய முடியாதெனப் பிரிட்டனில் ஓர் அரசியல்வாதி எத்தனையோ வருடங்களுக்கு முன்னர் கூறியிருந்தார். இக்கூற்று அந்தக் காலத்திற் பெரிய வாதப்பிரதிவாதங்களைக் கிளப்பியிருந்தது. ஏகாதிபத்தியக் கோட்டையை அஸ்திவாரத்துடன் தகர்த்தெறிவதற்கென எழுந்த அச்சொற்றொடரானது ஏகாதிபத்திய தாஸர்களின் முயற்சிகளுக்குமே முட்டுக்கட்டையாக அமைந்துவிட்டது. நாட்டிலே அமைதியான ஒரு நிர்வாகம் நடைபெற்றால், அரசியல் அடிமைகளாகத் தாம் இருப்பதை மக்கள் உணர மாட்டார்கள் என்பது ஏகாதிபத்திய ஆட்சி முறையின் தாற்பரியமாகும்.

ஆண்டுக்கணக்காக அரசியல் அடிமைகளாகக் கட்டுண்டு

**இராஜ அரியரத்தினம்**

வாழும் மக்களின் நோக்கங்கள் உயர்வாகி இருப்பதில்லை. அடிமை மனப்பான்மை நன்கு உரமாவதுடன் ஒழுக்கமான வாழ்க்கைக்கும் பங்கம் ஏற்பட்டு விடுகின்றது. இதைத் தான் பாரதியார்:

"தாழ்வுற்று வறுமை மிஞ்சி
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டுநின்ற தாமோர்"

தேசமெனக் கூறினர்.

ஏகாதிபத்திய ஆட்சிக்கு அரண் அமைத்துவந்த பிரிட்டனும் தனது செல்வாக்கு மிகுந்த நாடுகளில் ஜனநாயகம் என்ற போர்வைக்குள்ளே மக்களை அடிமைகளாகவே வைத்திருந்தது. மக்களைப் படிப்படியாகச் சுயாட்சி பெறுவதற்குப் பக்குவம் செய்து வருவதாகவும் பிரித்தானியர் பிரசாரம் செய்துவந்தனர்.

## தாழ்வு மனப்பான்மை

இலங்கை இன்று ஓரளவுக்குச் சுதந்திரமடைந்திருப்பினும் மக்களிடத்தே தாழ்வு மனப்பான்மை அகன்றபாடில்லை. அந்நிய மோகமும் போலி நாகரீகமுமோ சுதந்திர இலங்கையிலே தலைதூக்கி நிற்கின்றன.

இந்தியாவில் மகாத்மா காந்தி கால் நூற்றாண்டுக்கு மேலாகத் தன்னம்பிக்கையின் உயர்வை மக்களுக்குப் போதித்தார். அப்படியிருந்தும் அந்நாட்டிற்கூடப் பிறர் தயவைநாடும் குணம் இன்றுந்தான் நீங்கவில்லை. இது யாருடைய குற்றம்? நாட்டுமக்களின் குற்றமெனக் கூறமுடியாது. அடிமை வாழ்வின் விளைவே இப்பிற்போக்குக்குக் காரணமாகும்.

இதற்காகவே காந்திஜி வெள்ளையர்கள் இந்தியாவினின்றும் வெளியேற வேண்டுமென வற்புறுத்தி நின்றார். ஆளும் வர்க்கத்தினர் நாட்டினின்றும் மூட்டை முடிச்சுகளுடன் வெளிக்கிளம்பினாற்றான், அங்குள்ள மக்கள் தாம் விடுதலை பெற்றுவிட்டனர் என்பதை உணரமுடியும். அப்போதுதான் அவர்கள் 'நாமிருக்கும் நாடு நமதே' என்பதை அறிந்து கொள்வதும் இலகுவாகும். நாட்டுமக்கள் உண்மையாகவே தாம் சுதந்திர வாழ்க்கையை மேற்கொண்டு விட்டதாக எப்போது எண்ணுகின்றனரோ அப்போத்த அவர்களது நாடும் சுதந்திரம் பெற்ற நாடாகிவிடுகின்றது.

## தன்னம்பிக்கை

இன்று இலங்கையில் உள்ள மக்கள் அனைவரும் இவ்வாறு எண்ணுகின்றனரோ எனின் 'இல்லை' என்றே கூறவேண்டும். அந்நியரின் 'பிடி' இன்னும் அகலவில்லையெனக் கருதுவாருமுளர்.

ஆகவே, சுதந்திரமானது முதலாவதாக மக்களுக்குத் தன்னம்பிக்கையை ஊட்டவேண்டும். அதற்காகப் பிறநாடுகளின் தொடர்புகள் வேண்டியதில்லையெனக் கூறி நாம் புறத்தே இருத்தல் தவறு. அப்படியானால் தேசியம் அதற்குரித்தான சிறப்பை இழந்துவிடுகின்றது. ஒருவரின் ஈடேற்றம் அவரிலேயே தங்கியிருக்கின்றது. பிறசக்திகளின் உதவியை நாடக்கூடாது. அதே போன்று, ஒருநாட்டின் சுபீட்சமும் அந்நாட்டின் சொந்த முயற்சியிலேயே முற்றுந் தங்கியிருக்கின்றது.

இதையே இராஜாஜியும், நேருஜியும் தமது கருத்துக்கள் மூலம் எமக்குத் தெரிவிக்கின்றனர். ஆகவே, எங்கள் குறை குற்றங்களை நாங்களே அறிந்துகொள்ளுதல் அவசியமாகின்றது. அறிந்தபின் அவற்றுக்குப் பரிகாரந் தேட வேண்டியதும் எங்களைப் பொறுத்ததேயாகும்.

பிறரை நம்பி வாழ்வதும், நாடு இன்னும் திருத்தமுறவில்லையே என்று சொல்லிக்கொண்டு தவறுகளை மூடி மறைப்பதும், புண் ஆறினாலும் தளும்பு மாறாது என்பதுபோல அதுவும் அடிமைத்தனத்தின் விளைவேயாகும். தன்னம்பிக்கையே சுய மரியாதையெனக் கொள்ளினும் தகும்.

## செல்வநிலை

அரசியலிற் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் கண்முன்னே ஏற்பட்டுக்கொண்டுவருவதே போன்று, நாட்டின் செல்வ நிலை சம்பந்தமாகவும் மாற்றங்கள் உண்டாகி வருகின்றன. சில வருடங்களுக்கு முன்னர் ஒரு நாட்டின் செல்வத்துக்கு வேறோர் நாடே காரணமாக இருந்துவந்தது. பசுவுக்கு ஒருவர் தீனியிட்டு வளர்க்க வேறொருவர் அதன் பாலைக் கறந்து பருகிப் பருமனடைவது போன்று கீழைத் தேசங்களின் செல்வத்தைச் சுரண்டி மேற்றிசை நாடுகள் பசியாறிவந்தன. அத்துடன் இந்நாடுகள் அடிமைத்தளைகளால் நன்கு பிணிக்கப்பட்டுமிருந்தன. சுருங்கக் கூறின் மேற்றிசை நாடுகளின் செல்வக் களஞ்சியங்களாகவே கீழ்த்திசை நாடுகள் விளங்கின. கீழைத் தேச மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்வதை விரும்பாத மேற்றிசை முதலாளி வர்க்கத்தினர் அந்நாட்டுத் தொழிலாளர்களுக்கு மிகச் சொற்ப தொகையே ஊதியமாகக் கொடுத்தனர். இப்போது இந்நிலை மாறி எல்லாரும் இந்நாட்டு மன்னர் என்ற தத்துவம் சாதாரண மக்களின் உள்ளங்களிலும் நன்கு பதிந்துவிட்டது. எனவே, தொழிலாளர் திருப்தியுடன் வாழ்ந்தாற்றான் அவர்களின் வாழ்க்கைதரம் உயர்ந்தாற்றான், உலகம் உய்யும் என்ற உண்மையைப் பணக்காரர் உணர்ந்துவரலாயினர். இவ்வாறே ஒரு நாடு வளம் பெற்று வாழ்ந்தால், ஏனைய நாடுகளின் சுதந்திர வாழ்வுக்கும் என்றோ ஒருநாள் ஆபத்து உண்டாகியே தீரும் என்பது ஏகாதிபத்திய நாடுகளுக்கு நன்கு தெளிவாகிவிட்டது.

## சுவர்க்கலோகமா?

ஒரு நாடு சுதந்திரம் பெற்றவுடன் அது மறுகணம் சுவர்க்கலோகமாக மாறுவது இயலாதகாரியம். சின்னஞ்சிறு தீவாகிய இலங்கை சுதந்திரமடைந்து ஒருவருடம் நிரம்பிய போதிலும் வாழ்க்கைச் செலவு விஷம் போல் ஏறி வருகின்றது. நாட்டிலே போதிய அரிசி தானுங் கிடையாது. உணவு நெருக்கடியும் பணக் கஷ்டமும் ஒன்று சேர்ந்து மக்களை வருத்தும் காலம் அதிக தூரத்திலே இல்லையென்றே கூறவேண்டியிருக்கின்றது'

இலங்கை மந்திரிமார் ஒவ்வோர் திக்காகப் பணத்தைச் சிதறுகின்றனரே யன்றி, ஆக்க வேலைகளிற் கவனஞ் செலுத்துவதாயில்லை. 'வாழ்க்கைச் செலவு உயர்ந்துவருகின்றதே, அதைக்குறைப்பதற்கு என்னவழி' என்று கேட்டால் ஒவ்வொரு மந்திரிமாரும் ஒவ்வொரு மாதிரிப் பேசுகின்றனர்.

நாட்டிலே உற்பத்தியைப் பெருக்கி மலிவாக விற்பதே இதற்கு வழியென பிரதமர் சேனநாயகா தெரிவிக்கின்றார்.

ஐக்கிய சங்கங்களின் மந்திரி கூறும் நியாயம் இன்னும் ஒருபடி உயர்ந்ததாகவே இருக்கின்றது! வியாபாரிமாருடன் சங்கக்கடைகள் உறைப்பாகப் போட்டியிட்டாற்றான் விலைவாசிகளைக் குறைக்கலாமென அம்மந்திரி கூறுகின்றார்.

ஆறுவருடத் திட்டத்தில் நம்பிக்கை பூண்டுள்ள நிதி மந்திரி, அதுவே செல்வநிலையைச் செம்மையாக்குமெனக் கருதுகின்றார். தொழில்—சமூகசேவா மந்திரி கூறுவது இவற்றினும் பார்க்க அற்புதமாக இருக்கின்றது. வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கு மந்திரிசபை ஆவலாக இருக்கின்றதென்பதே அவர் கூறும் சமாதானமாகும்.

## ஸ்ரீமான் பொதுஜனம்

இவர்களுக்கு ஸ்ரீமான் பொதுஜனம் ஒரு யோசனை கூற விரும்புகின்றார். அதாவது: வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான வழிவகைகளைக் கண்டுபிடிப்பதற்கென ஒரு மந்திரியைப் புதிதாக நியமித்து, அவருக்குச் சில உயர்தர உத்தியோகத்தர்களையும் உதவிக்கென அமர்த்திவிடுவதே அந்த யோசனையாகும்! அப்படியானால் மந்திரிமாருக்கு எவ்வித தலையிடியுமே இருக்கமாட்டாது.

சுதந்திரத்தின் உட்பொருளை அறிவதற்காக இவ்வளவு தூரம் அலைய வேண்டியதாயிற்று. ஆம், சுதந்திரம் பெறற்கரிய சம்பத்தாகும். ஆனால், காந்திஜி கூறுவது போன்று 'சுதந்திரம் என்றால் அந்நாட்டு மக்கள் ஆட்டுமந்தை போன்று நடந்துகொள்ளுவதன்று. நாடு செம்மையுற நாம் உழைக்கவேண்டும். சுதந்திரம் என்றால் அது சமத்துவமாகும். சமத்துவம் என்று கூறும்போது அரசியற் சுதந்திரமும், பொருளாதாரச் சுதந்திரமும் அனைவருக்குங் கிடைத்தாக வேண்டும்.

இத்தகைய அப்பழுக்கற்ற சுதந்திரம் இலங்கை மக்களுக்கு இன்று கிடைத்திருக்கின்றதா? வாசகர்களே சிறிது நேரம் யோசித்துப் பாருங்கள்!




### ஜனுப் லியாகத் அலி கான்

பாகிஸ்தான் பிரதம மந்திரி ஜனுப் லியாகத் அலி கான் பிரித்தானிய வானொலிப் பிரசார சங்கத்தின் உள்நாட்டு வெளிநாட்டு சேவைப் பகுதிக்காக ஒரு செய்தி யொன்றை வானொலி மூலம் பிரசாரம் செய்யும்போது எடுக்கப்பட்ட படம் இது.

கிழக்குப் பஞ்சாப்பிலுள்ள கர்னல் என்ற இடத்தில் ஜனுப் லியாகத் அலி கான் பிறந்தார். ஈரான் தேசத்து அரச வம்சத்தைச் சேர்ந்த இவருக்கு பாரசிகத் தொடர்புமுளது. அலிகாரில் கல்விபயின்று பின் இங்கிலாந்திலுள்ள ஒக்ஸ்போர்ட் சர்வகலாசாலையிற் சேர்ந்தார். 1922-ம் ஆண்டில் நியாயவாதியானார். பின்பு இந்தியா வந்து பஞ்சாப் நீதிஸ்தலத்தில் நியாயவாதியாகக் கடமைபார்த்து அடுத்த வருஷத்தில் முஸ்லீம் லீக்கில் சேர்ந்தார். 1926-ல் அரசியலில் ஈடுபட்டுப் பெரும் புகழடைந்து அகில இந்திய முஸ்லீம் லீக்கின் காரியதரிசியாக 1936-ல் நியமிக்கப்பட்டார். காலஞ்சென்ற ஜனுப் ஜின்னு அவரைத் தமது வலது கையாகவும் முஸ்லீம் சமுதாயத்துக்குப் பெருந் தூணாகவும் மதித்துவந்தார். பாகிஸ்தானுக்குச் சுதந்திரம் கிடைத்தபொழுது 1947 ஒகஸ்ற் 15-ல் பாகிஸ்தானின் பிரதம மந்திரியானார்.

—லண்டன் பிரித்தானிய வானொலிப்பிரசார சங்க வெளிநாட்டுப்பகுதியின் உபயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழகேசரி

சுன்னாகம், சர்வதாரி, தை உச

— காந்தி ஆண்டு 80 —


## ஒல்லாந்தரின் ஒவ்வாத வாதம்

இந்தோனேஷியா விஷயமாக ஆசிய மகாநாட்டினர் செய்த தீர்மானங்கள் முற்று முழுதாக இப்போது ஐக்கிய நாடுகளின் சங்கத்தால் ஆமோதிக்கப் பட்டிருக்கின்றன. அத்தீர்மானங்களைப் பயபக்தியுடன் ஒல்லாந்த அரசினர் நிறைவேற்ற வேண்டியதே முறை. அத்தீர்மானத்தின் பிரதான அம்சங்களாவன (1) யுத்தம் உடனே நிற்பாட்டப்பட வேண்டும். (2) இந்தோனேஷியாவின் தலைவர்கள் உடனே விடுதலையாக வேண்டும். (3) அடுத்த வருடம் (1950) ஜூலை மாதத்துக்கு முன் அரசியல் அதிகாரத்தை இந்தோனேஷியர் பொறுப்பில் ஒல்லாந்தர் கையளிக்க வேண்டும். (4) அடுத்த மே மாதத்திற்கு முன்னர் இடைக்கால அரசாங்கம் அமைக்கப் பெற்று ஒக்டோபர் மாதம் முடிவடைய முன்னர் பொதுத் தேர்தல் நடைபெறவேண்டும். இவைகள் நீதியான தீர்மானங்களே. அப்படியிருந்தும் இதைக் கண்டு ஒல்லாந்த அரசினர் வெருட்சி யடைகின்றனர். தமது சொந்த விஷயத்தில் பாதுகாப்புச் சங்கம் இப்படியாகத் தலையிடலாமா என்று மனக்கசப்புடன் கேட்கின்றனர்.

இந்தோனேஷியா மாத்திரமன்று இலங்கை, இந்தியா, பர்மா முதலிய நாடுகள் யாவும் ஐரோப்பியரின் சொந்த நாடாக இருந்த காலமும் உண்டுதான். ஆனால் அக்காலம் போய் சுதந்திர நாட்டத்தோடு கூடிய நவயுகம் பிறந்துள்ள இக்காலத்தும் இன்னும் அடிமை நாடுகள் உலகில் இருக்குமென எண்ணுவது அறியாமையாகும்? ஒல்லாந்தர் சென்ற இருநூறு வருடங்களாக இந்தோனேஷியாவின் செல்வத்தைக் குறைவின்றி அனுபவித்துவந்தனர். அப்படித்தான் அந்நாட்டின் நிலைமை இருக்கவேண்டுமென்று இன்னும் எண்ணுவதா? விழித்தெழுந்து தமது சுதந்திரத்தை நாட்ட முன்வந்த இந்தோனேஷியரின் சக்தியை ஒல்லாந்தர் மாத்திரமல்ல வேறெந்த வல்லரசினர் தாமும் அடக்கிவிட இயலாது. போலிச்சாட்டுகள் கூறி இன்னும் இந்தோனேஷியாவிற் சிலகாலம் தாமதிக்கப் பார்ப்பது ஒல்லாந்தருக்கு அழகல்ல. பழைய போலி நியாயங்களை இந்த இருபதாம் நூற்றாண்டில் யாவர்தான் ஏற்பார்கள்?

இத்தருணத்தில் தாம் விட்டுவிலகின் இந்தோனேஷியாவிற் கொலையும், களவும், கலகமும், அழிவுகளும் ஏற்படுமென்று ஒல்லாந்தர் மிக மனவருத்தப்படுகின்றனர். இன்னும் இந்த நாடு சீர் திருத்தமடையவில்லை; அந்நிலைக்கு வரும் வரையும் தமது சமூகம் அவசியமென்கின்றனர். இந்தப் பல்லவிகளை உலகில் எவராவது செவிகொடுத்துக் கேட்பாரா? பிரிட்டிஷார் இந்தியாவை தமது அடிமையாக வைத்துக்கொள்வதற்கு முன்னர் இடைவிடாது கூறிய போலி நியாயங்களைத்தான் இப்போது ஒல்லாந்தர் எடுத்துக் காட்டுகின்றனர். சென்ற முந்நூறு வருடங்களாக இந்நாட்டினைத் திருத்தாத ஒல்லாந்தர் இனியா திருத்தப் போகின்றனர்? ஆட்டுக்குட்டி மழையில், நனைவதைக்கண்டு ஓநாய் பரிதாபப்பட்டவாறு ஒல்லாந்தரின் கருணை மொழிகள் இருக்கின்றன.

இந்தோனேஷியாவைப் பற்றி ஒல்லாந்தர் இவ்வளவு பரிதாபப்பட வேண்டியதில்லை. இந்தோனேஷிய மக்கள் தமது நாட்டின் குறைகளைத் தாமே கவனிக்கக் கூடியவர்கள். அன்றியும் ஒருகால் உள் நாட்டு கலகம் ஏற்படினும் நட்டந்தான் என்ன வந்துவிட்டது? சுதந்திரத்தை ஒருநாடு பெறுங்கால் கஷ்டங்களும் நஷ்டங்களும் வந்து சேர்வது சகசமே. இதைப்பற்றி முட்டைக்கண்ணீர் விழுத்த வேண்டியதேயில்லை.

இந்தோனேஷியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டும் விஷயத்தில் ஆசிய நாடுகள் மிக உருக்கத்துடன் முனைந்து நிற்பதை ஒல்லாந்தர் அறிந்தும் மேன்மேலும் தந்திர வார்த்தைகள் கூறுவது வேடிக்கையாகின்றதே. பாதுகாப்புச் சபை இவ்விஷயத்தில் ஏற்றதைச் செய்துமுடிக்குமென்பது யாவருடைய நம்பிக்கை. அப்படித்தான் இச்சபை தவறவேண்டிவரின் ஆசிய நாடுகள் தமது முழுப் பெலனை உபயோகித்து இந்தோனேஷியாவின் சுதந்திரத்தை நிலைநாட்டாது விடுவாரா? ஆசிய நாடுகள் இனி மேலைத்தேசத்தவரின் ஆதிக்கத்தைச் சிறிதாவது பொறுத்து நடக்கப்போவதில்லை. ஐக்கிய நாடுகள் சங்கம் மிகத் திடமாகவும் உரப்பாகவும் நின்று இச்சமயத்தில் தமது கடமையை ஆற்றுவாராக. விஷயம் சரியா பிழையா என்பதை முடிவு செய்வது ஐக்கிய நாடுகள் சங்கத்தின் இப்போதைய வேலையல்ல. பிழையென்று நன்றாக அறிந்த விஷயத்தை இன்னும் நடக்க விடுவதா? ஒல்லாந்தரை வேண்டுமாயின் நடபடிக்கைகள் கையாண்டாவது வழிப்படுத்த வேண்டியதுதான். இவ்விஷயத்தைப் பின்போடுவதென்பது எப்படி? சடுதியில் செய்து முடித்தேயாக வேண்டும். ஒல்லாந்தர்க்கு நல்லபாடம் படிப்பித்தாற்றான் மற்றைய ஆசிய நாடுகளின் செல்வத்திற் கண் வைத்த வல்லரசினரென்போரும் உண்மையை உணர்ந்து நீதியாக நடப்பர்.

## அவமான யோசனை!


இலங்கையின் செல்வத்தை விருத்தி செய்தற்கு உபாயமொன்றை றேமன்ட் குணசேகரா அவர்கள் கூறியுள்ளார். டெயிலி நியூஸ் பத்திரிகையும் அதனை மெச்சி முதற் பக்கத்தில் மிகத் தெளிவாக பிரசுரஞ் செய்துள்ளது. இவ் விஷயம் இலங்கை மக்களின் பெருமைக்கு அவமானத்தை விளைக்காதா என்று கேட்கின்றோம். இந்தியாவில் எங்கணும் மது நீக்கமும் குதிரைப் பந்தயம் நிற்பாட்டலும் துரிதமாகக் கையாளப்படுவதால் அங்கே தனவந்தர் தமது மிகுதிப் பணத்தைச் செலவு செய்ய வழிதெரியாது முட்டுப்படுகின்றாராம். இலங்கையில் நன்றாக மதுவினை அருந்தலாம், குதிரைப் பந்தயத்தில் ஈடுபடலாம் என்று இந்தியா எங்கணும் விளம்பரஞ் செய்யின், பெருந்தொகையாக இந்தியத் தனவந்தர்கள் இலங்கையைத் தரிசிப்பார்கள். அப்போது இலங்கையின் செல்வமும் விருத்தியடையும் என்று கூறுகின்றார். இவ்வழிகளன்றிச் செல்வத்தைஈட்ட இன்னொரு வழியும் உண்டு. அதை இந்த மேதாவி மறந்து போலும் விட்டார். மது நீக்கம், குதிரைப் பந்தயம் நிற்பாட்டல் என்னும் விஷயங்கள் இந்தியாவில் ஏன் கையாளப்படுகின்றன என்பதை ஆராய்ந்து பாராதும் இலங்கை யரசினரும் அவ்வழிச் செல்ல முயலாதும் இப் பாதகங்களை இலங்கையில் விருத்திசெய்து பணம் ஈட்டும்படி கூறினாரே. இவருடைய துணிவைத்தான் நாம் மெச்சுகின்றோம். இலங்கை மக்கள் மனப்பான்மை இத்தகையதா என்று உலகம் நகையாதா? சன்மார்க்கத்திற்கு மாறான விஷயங்களைப் பகிரங்கமாகக் கையாளும்படி இந்தச் சிங்களக் கனவான் கூற, அதை அப்படியே பிரசுரித்து முதன்மை கொடுத்த பத்திரிகையின் மதிப்பை என்னென்று பகர்வது. இவர்களா இலங்கையை உயரிய வழியில் ஈடேற்றத் தொண்டு புரிபவர்? போலியான ஐரோப்பிய நாகரிகத்தின் முதிர்ச்சியே இவ்வாறு நடக்கத் தூண்டியுள்ளது. நம் நாட்டின் ஒழுக்கநிலை இவ்வளவு கேவலமான கதியை அடைந்ததேயென்று வருந்துகின்றோம். பொருளீட்ட எத்தனையோ கௌரவமான வழிகள் இருக்கவும் இந்த இழிந்த முறைகளை இவர்கள் நாடினரே! நாட்டின் கதியும் இப்படியாயிற்றே!

## ஆசிரியர்கட்டும்

உபகாரசம்பளம் பெறும் அரசாங்க உத்தியோகத்தர் காலஞ்சென்றால் அவர்கள் மனைவிமக்கட்கும் உபசார சம்பளம் கிடைப்பதுண்டு. ஆனால் உபகாரசம்பளம் பெறும் ஆசிரியர்களின் குடும்பத்தினர்க்கு இவ்வுரிமை கிடையாது. இங்கிலாந்திலும் வேறுபல நாடுகளிலும் ஆசிரியரின் மனைவிமக்கட்கு, அவர் இறந்தகாலத்து, உபகார சம்பளம் கிடைத்து வருகின்றது. இவ்விஷயமாகச் சென்ற வாரம் பிரதிநிதிகள் சபையில் ஒரு பிரேரணை காலிப் பகுதிப் பிரதிநிதியாகும் திரு. தஹநாயக்கா கொண்டுவந்தனர். அப் பிரேரணை நிறைவேறுதாயிற்று. அரசினர் இவ்விஷயத்தை ஆலோசித்து வருகின்றனரெனவும் அடுத்த சிலவருடத்தில் இவ் விஷயம் பிரஸ்தாபிக்கப்படும் எனவும் கூறிப் பிரதமமந்திரியார் இவ்விஷயத்தை நிற்பாட்டி விட்டனர். இவ்விஷயம் அவசியம் முடிவு செய்யப்படவேண்டுமென்பதை எவரும் மறுக்கமாட்டார். ஆசிரியர்களின் மனைவி மக்கட்கும் உபகார சம்பளம்வழங்க வேண்டுமென்ற கிளர்ச்சி ஏற்பட்டுப் பதினைந்துவருடங்கட்குமேலாகின்றது. அப்படியிருந்தும் இவ் விஷயம் அவதியில்லை என்று எப்படி முதன் மந்திரியார் கூறினாரோ? ஆசிரியர்களின் அனுதாபத்தைப் பெறுதற்கும், அரசினர் மீது அவர்கட்கு ஆத்திரமுண்டாகச் செய்தற்குந்தான் இப் பிரேரணை கொண்டுவரப் பட்டதாக முதன் மந்திரியார் கூறியது அவசியமில்லாப் பேச்சென்றே கூறுவாம். இற்றைக்கு பத்து வருடங்கட்குமுன் இவ் விஷயம் அரசாங்க சபையில் பிரேரிக்கப்பட்டதாகும். பல காரணங்களாற் பின்போடப்பட்ட இவ்விஷயம் இன்னும் முடிவுக்கு வராது இழுபடுகின்றதே. எனவே இப்போது இவ் விஷயத்தைப் பரோபகாரமாக ஒருவர் பிரேரிக்க முன்வந்தனராக அவர் செய்கைக்குப் பொய்ச்சாட்டுக் கூறுவது எப்படிப் பொருத்தமாகும்? அரசாங்கத்தை நடாத்தும் மந்திரிமார் தாமுஞ்செய்யாதுவிட்டு மற்றையோரும் அதைச்செய்து பெயரைப் பெறப் படாதென நிற்பது பழிப்புக்கிடமான செயலன்றோ. இலங்கையரசினர் இவ் விஷயத்தைப்பின் போடாது விரைந்து முடிவுக்கு வருவது அவசியமாகும்.

## இலங்கை விமானத் தபால்

யாழ்ப்பாணத்துக்கும் கொழும்புக்குமிடையே விமானத் தபாற் போக்குவரத்து இம் மாதம் 7-ந் திகதியிலிருந்து ஆரம்பமாகும். இதனைத் தபாற்–தந்தி மந்திரி சிற்றம்பலம், தபாற்பகுதிப் பிரதம அதிகாரி இக்னேஷியஸ் பெரேரா, யாழ்ப்பாணத்து மே[illegible] வைப்பார்கள்.




வெள்ளிக்கிழமை அதிகாலையில் இலங்கையிலே உதித்த சூரியன் கொழும்புப் பகுதிகளில் மங்கள சூரியனாகத் திகழ்ந்திருப்பான் என்பதற்குச் சந்தேகமேயில்லை.

ஆனால் அதே சூரியன் அன்று காலை யாழ்ப்பாணத்திலே தோன்றிய போது மங்கலாக இருந்ததெனச் சிலர் கூறுகின்றனர். ஒருவேளை அன்று யாழ்ப்பாணத்திற் சிங்கக்கொடிகள்வானுயர்ந்து பறவாததைக் கண்டு சூரிய பகவான் சிந்தை கலங்கினாரோ, என்னவோ?

சுதந்திரம், ஒருவரின் மனநிலையைப் பொறுத்தது. இன்று யாழ்ப்பாணத்தில் உள்ளவர்களில் அநேகர் இலங்கை பெற்ற சுதந்திரத்தையிட்டுப் பொருட்படுத்துவதாயில்லை. இதற்கு ஒரு மருந்து கண்டுபிடிக்க வேண்டியது மந்திரிமாரைப் பொறுத்த முக்கிய வேலையாகும். இதைக் கேட்டு மீன்பிடி ஆராய்ச்சிப்பகுதி மந்திரி யாழ்ப்பாணத்து மக்களுக்குப் பாட்டிலே புத்தி புகட்டவுங் கூடும். எப்படியெனில்:

மணி வெளுக்கச் சாணையுண்டு,
—எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரீ!
மனம் வெளுக்க வழியில்லை,—
எங்கள் முத்து
மாரியம்மா, எங்கள் முத்துமாரீ!

யார் எப்படிப் பாடினாலும் எங்களுக்கென்ன?

### குதிரைக்குட்டி!

ஸ்ரீ ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களின் அரசியற் போக்கை மாற்றி அவருக்கு மந்திரி வேலைகொடுத்த பெருமை பிரதமர் சேனநாயகாவுக்கே உரியதென இங்கு பலமுறை எழுதியுள்ளேன். இதை கொழும்பு டைம்ஸ் பத்திரிகையின் பழைய ஆசிரியரும் ஆதரிக்கின்றார். வெள்ளிக்கிழமை வெளியான அப் பத்திரிகையின் விசேஷ இதழில் இலங்கை பெற்ற சுதந்திரத்தைப்பற்றி எழுதும்போது குறித்த ஆசிரியரான பிராங் மொறேஸ் அவர்கள், துள்ளித்திரிந்த குதிரைக்குட்டியாகிய ஸ்ரீ பொன்னம்பலத்தின் துடுக்கை ஸ்ரீ சேனநாயகா அடக்கி வைத்தார் எனக் குறிப்பிட்டுள்ளார் இது பிரதமர் சேனநாயகா பெற்ற பெரும் வெற்றியெனக் கூறும ஆசிரியர், அடுத்த பொதுத் தேர்தலில் ஸ்ரீ பொன்னம்பலம எங்கு நிற்பாரோ? என்ற பிரச்சினையையும் கிளப்பியிருக்கின்றார்.

### சபையில் ஸ்டாலின்

பொலிஸ் திருத்த மசோதா பற்றிப் பிரதிநிதிகள் சபையில் எதிர்க்கட்சியினர் நெருப்பெடுத்தனர் என அறிகின்றேன்.

'புரட்சிக்காரர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவதற்குத் தகுந்த முறைகளைக் கையாளத் தயங்கமாட்டேன். புரட்சிக்காரரை அடக்கி வைப்பது எனது கடமை' எனப் பிரதமர் கூறியதாகத் தெரிகின்றது.

மறுகணம் எதிர்க்கட்சியிலிருந்து "ஹெய் ஹிட்லர்" என்ற சத்தம் எழுந்ததாம். "ஸ்டாலின் அல்ல" எனப் பிரதமர் சுடச்சுடக் கூறினாராம். இதிலிருந்து ஒரு காரியம் புலனாகின்றது; இலங்கையில் ஜனநாயகம் நிலவுகின்றதென்பதே அது.

### கார் மோதியது!

சில தினங்களுக்கு முன்னர், இலங்கைப் பிரதமரின் கார் ஒன்று வெயிலுக்குப் பதுங்கி நடுத்தெருவில் நின்று கை அசைக்கும் பொலிஸ் புலியின் நிழல் ஸ்தம்பத்துடன் மோதியது: ஸ்தம்பம் அஸ்திவாரத்துடன் பெயர்ந்துவிட்டது; கார் சேதமுற்றதுடன் லண்டனுக்குப் பறந்து சென்ற பிரதமரின் பணியாளனான சைமனுக்குங் காயமேற்பட்டுவிட்டதாம். சாரதியும் அதே கதிக்குள்ளானார். பிரதமர் இருவரையும் பொலிஸ் அதிகாரியுடன் வைத்தியசாலைக்குச் சென்று பார்வையிட்டாராம். பிரதமரின் வேலைக்காரர்களாகப் பதவி வகிப்பதிலும் ஒரு மதிப்பு இருக்கின்றதல்லவா?

## திருமணம்

### தங்கராசா–புஷ்பராணி

வயாவிளான் திரு. க. வே. சுப்பிரமணியம் அவர்களின் சிரேட்ட புத்திரி செல்வி **புஷ்பராணி**க்கும், உரும்பராய் திரு. ச. கந்தையா அவர்களின் புத்திரனும் யாழ்ப்பாணம் காலநிலை அவதான நிலைப் பகுதியிற் கடமையாற்றுபவருமாகிய செல்வன் **தங்கராசா** அவர்களுக்கும் சென்ற வியாழக்கிழமை (3–2–49) பகல் 12 மணியளவில் மணமகளில்லத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நிறைவேறியது. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களும் பெற்று நீடூழி வாழ்வார்களாக.

* * *

### S. V. முதலியார் – இராஜராஜேஸ்வரி

மயிலிட்டி வாசரும், திருநெல்வேலிச்சைவாசிரியகலாசாலை அதிபருமாகிய திரு. சி. சுவாமிநாதன் B. A. அவர்களின் புத்திரி செல்வி **இராஜராஜேஸ்வரி** அம்மாளுக்கும் புன்னாலைக்கட்டுவன் திரு. ஆ. சங்கரப்பிள்ளை அவர்களின் புத்திரனும், பண்டாரவளைப் புகையிரத நிலையத்திற் கடமையாற்றுபவருமாகிய செல்வன் **S. V. முதலியார்** அவர்களுக்கும் சென்ற வியாழக்கிழமை (4–2–49) இரவு 3.37 மணியளவில் மணமகளில்லத்தில் திருமணம் மிகச் சிறப்பாக நிறைவேறிற்று. தம்பதிகள் சகல ஐஸ்வரியங்களும் பெற்று நீடூழி வாழ்வார்களாக.

## புதிய முத்திரைகள்

சுதந்திர விழாவை முன்னிட்டு இரு புதிய விசேஷ முத்திரைகள் சென்ற வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டுள்ளன. 4 சத முத்திரையிற் சிங்கக்கொடி பொறிக்கப்பட்டிருக்கின்றது. 5 சத முத்திரையில் இலங்கைப் பிரதமர் சேனநாயகாவின் படம் பொறிக்கப்பட்டிருக்கிறது.

25 சத முத்திரையும் 5 சத முத்திரை போன்றது. ஆனால் வர்ணச் சேர்க்கையில் வித்தியாசமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்தீயமே கதிமோட்சம்

## அமெரிக்காவின் அழைப்பு

**சென்றவாரம் இந்தியா** எங்கணும் மகாத்மாவின் சிரார்த்த தினம் கொண்டாடப்பட்டது. பிரதம தேசாதிபதி ஸி. இராசகோபாலாச்சாரியர் உட்பட நாட்டுமக்கள் அனைவரும் மகாத்மாவின் திருவடிக்கு நமஸ்காரம் செய்தனர். இன்றுதான் மகாத்மாவின் அரிய புத்திமதிகளின் அவசியம் நன்கு விளங்கக்கூடியதாகின்றது. எத்தனையோ கஷ்டங்கள் விவாதங்கள் ஏற்பட்டுள்ள இச்சமயத்தில் மகாத்மா நம்மை வழிகாட்டி நிற்க நாம் தவஞ் செய்தோமில்லை. அவர் பூத உடம்பு நம்மைவிட்டு நீங்கியதாயினும், அவரின் ஆத்மா என்றும் நம்மை விட்டு அகலமாட்டாது. நமக்கு ஆறுதலளித்து நாம் உயரிய வழியிற் செல்ல உதவிபுரிந்து நிற்குமென்று நம்புவாம். இன்று மகாத்மாவின் போதனைகளே உலகத்துக்கு மீட்சியை அளிக்குமென்று உலக மேதாவிகள் உண்மையாகக் கருதுகின்றனர். அமெரிக்கர், ஆங்கிலேயர் என்போர் இடைவிடாது மகாத்மாவின் பெருமைகளையும் அரிய போதனைகளையும் விசேஷமாக எடுத்துக் காட்டி உலகம் அவ்வழிப் பிரகாரம் நடந்தாற்றான் சமாதானம் உண்மையாக நிலவுமென்பதை விளக்குகின்றனர். சுருங்கக் கூறின் காந்தீயமே உலகவியவகாரத்தை நீக்கக் கூடிய மருந்தாகும்.

### காஷ்மீர்

இச்சமஸ்தானத்தில் நடந்து வந்த யுத்தம் நிற்பாட்டப்பெற்று ஒரு மாதத்துக்கு மேலாகின்றது. இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு அரசாங்கங்களும் சனசம்மதம் அறியும் விஷயமாக வேண்டிய ஏற்பாடுகளை ஆலோசித்து வருகின்றன. காஷ்மீர் வாசிகள் சம்மதம் எதுவோ அதன்படி நடந்து கொள்ள இரு அரசினரும் இணங்கிவிட்டனராயின எவ்வித சங்கடங்களுமில்லையே. இப்போது கலகத்துக்குக் காலாக விருந்த பட்டாணிகளாகும் எல்லைப்புற வாசிகள் காஷ்மீரிலிருந்து வெளியேற்றப்படுகின்றனர். அதன் பின் பாகிஸ்தான் படைவீரரும் வெளியேறுவர். அடுத்தாப்போல் தேவையில்லாத இந்தியப் படைகளும் அகற்றப்படும். நாட்டில் சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு வேண்டிய படைகள் மாத்திரம் காஷ்மீரில் வைத்துக் கொள்ளப்படும். ஆகவே சமஸ்தான மக்களைப் பலவந்தப்படுத்தாது அவர்கள் நினைத்தபடி வாக்குரிமை யளிக்கப் போதிய வசதிகளைப் பெறுவர். இவ்விதமான நிலை காஷ்மீரில் ஏற்படச் செய்வதே ஐக்கிய நாடுகள் விசாரணைச் சபையினரின் வேலையாகும். இச்சபையினரின் மேற்பார்வையிற்றான் சனசம்மதம் பெறப்படும். பிரதமமந்திரியாகும் ஷேக் அப்துல்லாவின் அரசாங்கமே இந்த வேலையை இனிது செய்து முடிக்கும்.

### போபால் பரபரப்பு

மத்திய இந்தியாவிலே போபால் என்று ஓர் சமஸ்தானம் உளது. இங்கு அரசியற் கலகம் ஏற்பட்டு நூற்றுக்கணக்கானோர் சிறையில் அடைக்கப்படலாயினர். இங்கே வசிப்போர் பெரும்பான்மையும் இந்துக்கள். ஆனால் மன்னர் முஸ்லீம் நவாப்பு. தேசமக்கள் இச்சமஸ்தானம் இந்தியாவுடன் ஆட்சிமுறையில் சேர்ந்து கொள்ளவேண்டுமென்று பிடிவாதமாக நிற்கின்றனர். சமஸ்தான மன்னரோ அதற்கு இணங்குகின்றாரில்லை. சனநாயக அரசியலை இங்கு அமைப்பதென்றும் நவாப்புக்கு இணக்கமாயில்லை. பழையபடி அடக்குமுறையைக் கையாண்டு சர்வாதிகாரியாக இருக்கலாமென்று எண்ணுகின்றார். இது எப்படிக் கூடுமோ? இந்தியாவிலுள்ள எல்லாச் சமஸ்தானங்களும் இந்தியாவுடன் சேர்ந்து கொண்டதுமல்லாமல் சனநாயக அரசியல் முறையைத் தமது சமஸ்தானங்களில் ஏற்படுத்தி விட்டன. விஷயமிவ்வாறாக இச்சமஸ்தானம் மாத்திரம் நினைத்தபடி செய்வதென்பது எப்படி? இச்சமஸ்தான மன்னர் காலத்துக்கேற்பத் தாராளசிந்தையுடன் நடவாராயின் ஈற்றில் ஜூனகாத் என்ற சமஸ்தானத்து மன்னர் அடைந்த நிலையைத்தான் அடையவேண்டிவரும்.

### பண்டிதருக்கு அழைப்பு

அமெரிக்காவுக்குச் சமுகமளிக்கும்படி பண்டித நேரு அவர்கட்குப் பல அழைப்புப் பத்திரங்கள் கிடைத்திருக்கின்றன. வருகிற சித்திரைமாத நடுப்பகுதியில் பெரிய மகாநாடொன்று நியுயோக் நகரில் நடத்தவேண்டி ஏற்பாடுகள் நடக்கின்றன. அம்மகாநாட்டின் ஒரேயொரு நோக்கம் உலகில் சமாதானத்தை நிலைநாட்ட வழி காண்பதே. உலகின் பலபாகங்களிலுள்ள அரசியற் பெரியார்கள் இம் மகாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருக்கின்றனர். ஆனால் பண்டிதருக்கு விசேஷமான அழைப்புக் கிடைத்திருக்கின்றது. மேலும் நேர்முகமாகப் பண்டிதநேரு அமெரிக்காவினைத் தரிசிப்பின் அமெரிக்க அரசினர் பிழையானபோக்குகளை நீக்க இடமுண்டென்றும் பலர் அபிப்பிராயப் படுகின்றனர். அமெரிக்கருக்கு நல்லறிவுச் சுடர்கொளுத்தி உலகசமாதானத்துக்கு உண்மையான அத்திபாரம் அமெரிக்காவிற்றான் போடவேண்டுமாம். இந்தவேலை சித்தியடைவது நேருஜியின் வல்லமையால் ஆகவேண்டுமென்பது பலரின் அபிப்பிராயம்.

> - இந்தியா -

### முஸ்லீம்கள் சேரவேண்டும்

இந்திய சமட்டிக்குள் வசிக்கும் முஸ்லீம்கள் பொதுவாக இருவித மனப்பான்மையுடையவராகக் காண்கின்றனரெனக் காங்கிரஸ் பட்டாபி சீதாராமய்யா அவர்கள் அபிப்பிராயம் கூறியுள்ளார். அவர்கள் இந்திய அரசினர் மீது இராசவிசுவாசம் காட்டவேண்டியதாகின்றது. பாகிஸ்தான் அரசினர்மீதும் அனுதாபம் கொள்ளுகின்றனர். இது எப்படிக்கூடும்? இந்தியாவுக்குள் வசித்துக்கொண்டு புறத்தேயுள்ள இன்னொரு அரசினர்மீது விசுவாசத்தை அந்தரங்கத்தில் கொள்வதாற் பயன்யாது? இவர்கள் இந்தியாவினைவிட்டு வெளியேற இயலுமா? இவர்கள் தமது செல்வங்களையும் வீடுவாசல்களையும் விட்டுப் பாகிஸ்தானுக்குப்போக உடன்படமாட்டார்களென்பது திண்ணம். விஷயம் இப்படியாக இவர்கள் அவசியமின்றி நடக்கப்போகாத ஒன்றினை நினைத்து வருந்தியென்ன பயன்? இந்தியாவில் வசிக்கும் முஸ்லீம்கள் நிரந்தரம் வகுப்புவாதிகளாக நின்று தம்மைத்தாமே கெடுப்பதிலும் பார்க்கக் காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துழைப்பின் எவ்வளவு நன்மையாகும். இந்திய அரசினரோ எச்சமயவாதிகளையும் சாராது தேசியநோக்குடன் அரசியலை நடத்துவது யாவரும் அறிந்த விஷயம். இந்தியாவில் எச்சாதியினரும் எச்சமயத்தினரும் அஞ்சவேண்டியதில்லை. தேசியநோக்குடன் உழைப்பதே முறையென்று பட்டாபிசீதாராமய்யர் வெளிப்படையாகக் கூறிவிட்டார். இப் புத்திமதியை அனுட்டிப்பின் இந்தியாவில் வாழும் முஸ்லீம்கள் நிலை எவ்விதமும் இன்னலடையய இடமில்லை.

## தபாற் கட்டண விகிதத்தில் மீண்டும் மாற்றம்

**இம்மாதம் 7-ந் தேதி** (7-2-49) திங்கட்கிழமைதொடக்கம் உள்நாட்டு, இந்தியா, பாகிஸ்தான் கடித- 'போஸ்ற் காட்' போக்குவரத்துக் கட்டண விகிதத்தில் மீண்டும் மாற்றங்கள் செய்யப்பட்டிருக்கின்றன.

**உள்நாட்டு (இலங்கை)க் கடிதங்களுக்கு** முதல் ½ அவுன்ஸுக்கு 5 சதமும் அடுத்த ஒவ்வொரு அவுன்ஸுக்கும் 5 சதவீதமும்; 'போஸ்ற் காட்' டுகளுக்கு (முன்போல்) 3 சதமும் முத்திரைகள் ஒட்டப்படவேண்டும்.

**இந்தியா, பாகிஸ்தான் கடிதங்களுக்கு** முதல் ஒரு அவுன்ஸுக்கு 10 சதமும், அடுத்த ஒவ்வொரு அவுன்ஸுக்கும் 10 சதவீதமும்; 'போஸ்ற் காட்' டுகளுக்கு (பழமைபோல்) 5 சதவீதமும் முத்திரைகள் ஒட்டப்படவேண்டும்.

**ஏனையநாடுகளுக்குத் தபாற் கட்டணத்தில் மாறுதல் யாதும் இல்லை.**

## கோட்டாஞ்சேனைக் கொலைவழக்குத் தீர்ப்பு

### 2 எதிரிகளுக்கும் மரண தண்டனை

**கொழும்பு** கொட்டாஞ்சேனைக் 'கொலீஜ்' தெருவிலுள்ள திரு. டீ. டீ. எஸ். செனவரத்ன என்பவரைக் கொலைசெய்யச் சதிசெய்தார்கள் என்ற குற்றச் சாட்டில், பாஸ் கே. டி. தாமசவும், கொலை செய்யப்பட்டவரின் மனைவி ஸ்ரீமதி பியாட்ரீஸ் மோட் டீ. ஸில்வா செனவரத்னவும் குற்றவாளிகளெனவும், 1-ம் எதிரி செனவரத்னவைக் கொலை செய்தாரென்ற குற்றச்சாட்டில் குற்றவாளியெனவும், கொழும்பு பிரதம நீதிஸ்தலத்தில் நீதியரசர் திரு. ஆர். ஆர். குரொசெட் தம்பையா தலைமையில் நிகழ்ந்த வழக்கு விசாரணையின்போது, ஜூரிக் கனவான்கள் ஏகமன[illegible] தீர்ப்பின்படி [illegible] இரு வருக்கும் மரண தண்டனை விதித்துள்ளார்.

## நேருஜி ஆசிச்செய்தி

இலங்கைச் சுதந்திர தினத்தை முன்னிட்டுப் பிரித்தானிய பிரதம மந்திரி, அமெரிக்க ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் உட்பட பல நாட்டுப் பிரமுகர்கள் ஆசிச் செய்திகள் அனுப்பியுள்ளனர். இந்தியப் பிரதமர் நேருஜி தமது செய்தியிற் கூறுவதாவது:

"இலங்கையின் ஓராண்டுச் சுதந்திர விழாவின் போது ஆசிச் செய்தி அனுப்புவதையிட்டு அகமகிழ்கின்றேன். நாம் புதிதாக அடைந்துள்ள சுதந்திரம் ஆதிகாலத்துக் கலாசார முறையில் அமைந்துள்ள தொடர்புகள் மூலம் பிரிக்கமுடியாதவை. நமது இரு நாடுகளுக்கிடையே பிணிக்கப்பட்டுள்ள தொடர்பை இச் சுதந்திரம் பலப்படுத்துமென்பதில் 'எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு.

## சுதந்திர விழா

### யாழ்ப்பாணக்கொண்டாட்டம்

யாழ்ப்பாணம் முற்றவெளியிற் சென்ற வெள்ளிக்கிழமை சுதந்திரவிழாக் கொண்டாடப்பட்டது. பொலிஸ் அணிவகுப்பு அன்று பிற்பகல் 4 மணிக்கு ஆரம்பமாயிற்று. யாழ்ப்பாணப் பகுதிக் கல்லூரிகளைச் சேர்ந்த சாரணர்களும் இவ் விழாவிற் பங்குபற்றினர்.

மாகாண அதிபர் பி. ஜே. ஹட்சன் அவர்களின் தலைமையிற் பகிரங்கக்கூட்டம் ஆரம்பமாயிற்று. மேயர் சாம் சபாபதி அவர்களும் பரமேஸ்வரக் கல்லூரி அதிபர் ஸ்ரீ சு. நடேசபிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்றினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள அரசாங்கக் காரியாலயங்களும பொலிஸ் நிலையங்களும் கொடிகளாலும் மாலைகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. யாழ்ப்பாணம் புகையிரதஸ்தானமும் அவ்வாறே அலங்கரிக்கப்பட்டிருந்தது.

**ஆசிரியருக்குக் கடிதம்:**

## மகாசிவராத்திரி விரத நிர்ணயம்

**சைவர்கள் அனுஷ்டிக்**கின்ற விரதங்களுள் மகா சிவராத்திரியும் ஒன்றாகும்; சில பிரமாண நூல்களை ஆதாரமாக வைத்துக்கொண்டே வாக்கிய, திருக்கணித பஞ்சாங்ககாரர் விரத தினங்களைக் கணித்து வெளிப்படுத்துகின்றனர். ஆனால், இரு பஞ்சாங்ககாரருக்கும் திதி வியாபகம், அதாவது தொடக்க முடிபுகள் ஒரேவிதமாக இருக்கும் காலங்களிற்கூட, அவர்கள், சில விரத தினங்களை வெவ்வேறு நாட்களிற் குறிப்பிட்டு மக்களை மயக்கிவிடுகிறார்கள்.

இவ்வருடம் மாசிமாதத்துக் கிருஷ்ணபட்சத்துச் சதுர்த்தசி கொக்குவில் வாக்கிய பஞ்சாங்கத்தின்படி, 14ந் திகதி (25-2-49) வெள்ளிக்கிழமை இரவு 11 மணி 38 நிமிஷத்துக்குத் தொடங்கி, அடுத்தநாள் இரவு 11 மணி 07 நிமிஷம் வரையும் நிற்கிறது.

மட்டுவில் திருக்கணித பஞ்சாங்கத்தின்படி ஷை சதுர்த்தசி 14-ந் திகதி (25-2-49) வெள்ளிக்கிழமை இரவு 10 மணி 02 நிமிஷத்துக்குத் தொடங்கி, அடுத்தநாள் 12 மணி 02 நிமிஷம் வரையும் நிற்கிறது. இப்படியிருந்தும் மகா சிவராத்திரி 14-ந் திகதி வெள்ளிக்கிழமையெனக் கணிதகாரரும், அடுத்த நாளாகிய சனிக்கிழமையென வாக்கியகாரரும் குறிப்பிட்டிருக்கின்றனர். இதனால், எத்தினத்தில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிக்கவேண்டுமென்ற முடிபுக்கு வரமுடியாமல் சைவஉலகு திண்டாடுகின்றது.

பிரமாண நூல்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு கணிக்கும்போது ஏதோ ஒரு முடிபுக்குத்தான் வரக்கூடியதாக இருக்கும். ஒரு விஷயத்தில் இருவிதமான முடிபுக்கு வரக்கூடியதாக எந்தப் பிரமாண நூலும் அமைந்திருக்கமாட்டாது. எனவே, குறித்த இரு நாட்களில், எந்த நாளில் சிவராத்திரி விரதத்தை அனுஷ்டிப்பது சாஸ்திர சம்பந்தமாக இருக்கமுடியும் என்பதையே முடிபு செய்தல் வேண்டும் ஆதலின், அந்தநாள் வெள்ளியா அல்லது சனியா என்பதை அறிஞர்கள் ஆராய்ந்து வெளியிட்டால் சைவஉலகு பெரும்பயனடையும்.

சி. வைரவனார்
மணிவாசகசபை,
காரைநகர்,
5.2.49.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. 14654**

கொக்குவில் கிழக்கு,
1. கார்த்திகேசு சின்னத்தம்பி
2. பெண் செல்லம்

வழக்காளிகள்

சங்கரப்பிள்ளை நடராசா

பதில்வழக்காளி

யாழ்ப்பாணம்
வண்ணார்பண்ணை மேற்கு,
1. முத்தையா செல்லயா,
2. பெண்தெய்வானைப்பிள்ளை (மரணம்)

எதிராளிகள்

வண்ணார்பண்ணை மேற்கு,
முத்தையா செல்லயா மகள் இராசாத்தி அல்லது கதிர்காமநாயகி

பதில் வழக்காளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில் 14654-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் மூன்று துண்டுக்காணிகளை, 1949-ம் ஆண்டு பெப்ரவரி (மாசி) மாதம் 28-ந் திகதி (28-2-49) திங்கட்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

**தீர்வைத்தொகை**:—முதல் வட்டி ரூபாய் 818-75-ம், 23-8-39 திகதி தொடக்கம் இறுபடும் வரைக்கும் 100-க்கு 9 வீத வட்டியும், ஆனால் அவ்விதம் வரும் வட்டி ரூபா 181-25 சதத்திற்கு மேற்படாமலும் கோட்டுச் செலவு ரூபா 218-51 சதம்.

### காணிகளின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணைக் கிழக்கிறை 'இச்சாட்டியும்' மறுபிரிவுகளும். இதில் கிழக்குப் பக்கமாக நிலப்பரப்பு இரண்டு (2-ம்) வீடும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும். எல்லை: கிழக்கு, உவெஸ்லியன் மிசனுக்குரிய ஆதனம். வடக்கு, அருணசலம் கைம்பெண் சிதேவிப்பிள்ளைக்குரிய ஆதனம். மேற்கு, ஆறுமுகம் நடராசாவின் உருமைக் காறருக்குரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை. இதடங்கலும்.

2 மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "தீர்தான் வளவு" நிலப்பரப்பு மூன்று (3-ம்) பனைகளும் எல்லை: கிழக்கு 1-ம் எதிராளிக்கும் 2-ம் வழக்காளிக்கும் பங்காளருக்குமுரிய ஆதனம். வடக்கு கந்தப்பர் ஆறுமுகத்தின் உருமைக்காரருக்குரிய ஆதனம். மேற்கு சுப்பிரமணியர் சின்னையாவின் உருமைக்காரருக்குரிய ஆதனம். தெற்கு வாய்க்கால் இதிற் சொரியலாய் ஆறில் ஒன்றும் $(\frac{1}{6})$ அதற்குரியவைகளும்.

3 மேற்படி வண்ணார்பண்ணை மேற்கிறை "தட்டான் வளவும் பன்றிக் காட்டு வளவும்" நிலப்பரப்பு நாலேகால் $(4\frac{1}{4}$-ம்) கிணறும் வடக்கெல்லைக் காணிக்குள் இருக்கும் கிணற்றில் பங்கும் வழி வாய்க்கால் உரித்தும் தலவாசலும் கிட்டங்கி அறைகளும், வீடும். எல்லை: கிழக்கு ரேட்டு. வடக்கு சங்கரப்பிள்ளை பெண் நாகம்மாவுக்கும் சகோதரர்களுக்குமுரிய ஆதனம். மேற்கு மேலே குறிக்கப்படும் 2-ம் ஆதனம். தெற்கு வாய்க்கால். இதில் சொரியலாய் ஆறில் ஒன்று $(\frac{1}{6}$ம்) அதற்குரியவைகளும்.

சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை
Commissioner &
Licensed Auctioneer
தெல்லிப்பழை
25-1-1949

[3611]

## ஸி. ஸி. எஸ். பரீட்சை

ஒக்டோபரில் நடைபெற்ற ஸி ஸி. எஸ். பரீட்சையில் 10 பேர் சித்தியெய்தினர். இருவர் தமிழர் அவர்களின் பெயர்கள் வருமாறு: ஸி. விஸ்வாசம், ரீ. சிவஞானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பிற் பகற் கொள்ளை

## 4 லட்சம் பறந்தது

### பொலிஸ் வேஷத் திருடர்

அமெரிக்காவிலுள்ள கொள்ளைக் கூட்டத்தினர் கையாளும் முறைகளைப் பின்பற்றிச் சென்ற திங்கட்கிழமை காலை (31-1-49) கொழும்பிலுள்ள குதிரைப் பந்தயச் சங்கத்துச் சிறுப்பரைச் சுட்டுவிட்டு, ஆயுதந் தாங்கிய திருடர்கள் 4 இலட்சம் ரூபாவைக் கொள்ளையடித்துக் கொண்டு காரிலே பறந்து விட்டனர்.

பிரதிவாரம் குதிரைப்பந்தயச் சங்கத்தினர் சனிக்கிழமை வருமானத்தை வங்கிக்கு எடுத்துச் செல்வது வழக்கம். இவர்களுக்குத் துணையாகப் பொலிஸாரும் செல்வதுண்டு. அன்று வழக்கம்போற் பொலிஸ் அதிகாரியுடன் ஒரு கார் சங்கத்துக்குச் சென்றது. சிறுப்பர் பீரிஸ் என்பவரும் ஸ்ரீ பெரேராவும் பணத்துடன் காரில் ஏறிச் சென்றனர்.

பிரதிநிதிகள் சபை அங்கத்தினர் வதியும் "ஸ்ருவஸ்தி" என்ற விடுதி எடின்பற் கிரெஸென்ட் பகுதியில் உள்ளது. இவ்விடத்திற் கார் செல்லும்போது வேறு இருவர் காருட் புகுந்தனர். ஆயுதம் தாங்கிய இப்பேர்வழிகள் ஸ்ரீ பெரேராவை காரைவிட்டு இறங்கும்படி கட்டளை செய்துவிட்டு, சிறுப்பருக்குச் சுட்டனர். கழுத்திற் காயமடைந்த சிறுப்பர் கீழே விழ்ந்துவிட்டார் கார் பணப்பெட்டியுடன் பறந்து விட்டது.

அந்தரங்க உளவாளி ஒருவரின் உதவியுடன்தான் இந்த மாபெரும் மோசடி நடைபெற்றிருக்க வேண்டுமெனக் கருதப்படுகின்றது.

கொள்ளைக்காரரின் கார் காம்பெல் பிளேஸ் என்ற பகுதியிற் செவ்வாய்க்கிழமை இரவு கண்டுபிடிக்கப்பட்டது. கார் இப்போது கறுவாக்காட்டுப் பொலிஸ் நிலையத்தில் இருக்கின்றது.

சிறுப்பர் பீரிஸ் வைத்தியசாலையிற் சிகிச்சைபெற்று வருகின்றார். அவர் கொள்ளைக்காரருடன் மல்லுப்பிடித்த வண்ணம் உதவிக்காகக் கத்தினார் எனத் தெரிவித்தார்.

சிறுப்பருக்குச் சூடு விழுந்த வீதிக்கருகில் ஒரு மனிதனின் பாதரட்சையும், சில மயிரும் இரத்தக்கறையும் காணப்பட்டன. திருடர்கள் சென்ற கார் செவர்லட் சலூன் வாடகைக் காராகும். திருடர்களில் ஒருவன் பொலிஸ் பரிசோதகரின் உத்தியோக உடையிற் காணப்பட்டான்.

வழக்கமாகச் சங்கம், வாடகைக் கார் அமர்த்தும் நேரத்தையும் ஏனைய ஒழுங்குகளையும் அறிந்த ஒருவரே இக்கொள்ளையிற் சம்பந்தப்பட்டுள்ளார் எனக் கருதப்படுகின்றது. சங்கத்தில் வேலை பார்க்கும் ஒருவர் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். பொலிசார் புலன் விசாரித்து வருகின்றனர்.

கொள்ளையடித்தவர்களைப் பற்றிய சமாச்சாரத்தைத் தெரிவிப்பவர்களுக்குப் பொலிஸார் ரூ. 20,000 வெகுமதி அளிப்பார்கள். இதுவரை இலங்கைப் பொலிஸ் பகுதி இவ்வளவு பெருந் தொகையை வெகுமதியாக அளிக்க முன்வந்ததேயில்லை.

இதுசம்பந்தமாக, அந்த வாடகைக் காரை வழமையாக ஓட்டும் சாரதி யோன் சில்வா என்பவரின் பிரேதத்தைப் போன்றதெனக் கூறப்படும் பிரேதம் புத்தளப் பகுதியிலிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. உளவு பொலிசார் இது சம்பந்தமாகப் புத்தளப்பகுதிக்குச் சென்றுள்ளாராம்.

---

## அண்ணலுக்கு அஞ்சலி

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

### சாவகச்சேரி

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் சென்ற திங்கட்கிழமை(31-1-49)இரவு காந்திஜி சிரார்த்ததினம் கொண்டாடப்பட்டது வழக்கறிஞர் எஸ். எச். பேரின்பநாயகம், பண்டிதர் சி. கணபதிப்பிள்ளை ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றினர். இசைக்கச்சேரியும் நடைபெற்றது.

### மண்டூர்

கடந்த 31-1-49 திங்கட்கிழமை காலை மேற்படி தினம் மட்டக்களப்பு, மண்டூர் ஸ்ரீ இராமக்கிருஷ்ண சங்கப் பாடசாலையிற் கொண்டாடப்பட்டது. திரு. ஸ்ரீ வி. மயில்வாகனம் ஆசிரியர் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். "பாரதி" பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீமான். எம். நாகலிங்கம் அவர்களும் ஸ்ரீமதி எம். கோவிந்தசாமி அவர்களும் காந்திஜியினுடைய சரிதையை விரிவாக எடுத்தோதினார்கள். மாணவ மாணவிகள் இடையிடையே தேசிய கீதங்கள் இசைத்தனர். ஈற்றில் திரு. கு. அருளானந்த மூர்த்தி அவர்களின் நன்றியுரையுடனும் 'வாழ்க நீ எம்மான்' என்ற கீதத்துடனும் கூட்டம் நிறைவெய்தியது.

### கொக்குவில்

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண சைவவித்தியாசாலையில் கலைவாணிசபாவின் ஆதரவில் சென்ற 30-1-49 ஞாயிற்றுக்கிழமை மகாத்மா காந்தியடிகள்சிரார்த்ததினம் கொண்டாடப்பட்டது. காலைஊர்வலம் சிறப்பாக நடைபெற்றது. பின் சிறுவர் கூட்டம் ஆசிரியர் திரு. இ. கந்தையா அவர்கள் தலைமையில் நடந்தது. பாடசாலைச் சிறுவர்களின் பாட்டுகள் பேச்சுகள் நடந்தன.

பிற்பகல் இளைஞர் கூட்டத்துக்கு ஆசிரியர் திரு. செ. கந்தையா அவர்கள் தலைமை வகித்தனர். பல இளைஞர்கள் பேசினர். சேவா கிராம ஆச்சிரம மாணவர் திரு த. விநாயகமூர்த்தி அவர்கள் நூற்றல் வகுப்பொன்றை ஆரம்பித்து வைத்தார்கள். காந்தீயம் ஆசிரியர் திரு. சி. க. வேலாயுதபிள்ளை அவர்கள் சில குறிப்புகள் கூறினார்கள்.

இரவு பகிரங்கக் கூட்டம் மகாத்மாவுக்குப் பிரியமான பிரார்த்தனையுடன் ஆரம்பிக்கப்பட்டது. பிரமுகர்கள் சொற்பொழிவுகள் ஆற்றினர்.

---

## குத்தகை விளம்பரம்

யாழ்ப்பாணம் பெரிய (டிஸ்திறிக்) கோட்டு உத்தரவின்படி பின்னுற்சொல்லப்பட்ட காணிகள் குத்தகைக்குக்கொடுக்கப்படும்:-

(1) உடுவில் உடையார் கலட்டி என்னும் காணி—18 பரப்பு. எல்லாம் பனை.
(2) சுன்னாகத்தில் 'வலிநங்கை' என்னும் காணி ஒரு பரப்பு. வெறும் நிலம்.
(3) சுன்னாகத்தில் 'அம்பனை' என்னும் காணி —2½ பரப்பு—பனை.
(4) உடுவில் 'கோட்டை வயல்'—7 நெற்பரப்பு
(5) உடுவில் 'கட்டு வயல்' — 3 பரப்பு.
(6) உடுவில் 'புங்கட்டி வயல்' 5¼ பரப்பு.
(7) உடுவில் 'கமட்டான் வயல்' — 9 பரப்பு.

2. இந்தக்குத்தகைகள் 3 வருஷத்துக்குத்தான். ஒரு முறையிற் கொடுக்கப்படும்.

3. குத்தகை எடுக்க விரும்புவோர் ஒவ்வொரு காணிக்கும் புறம்பாக அல்லது எல்லாக் காணிக்கும் என்ன குத்தகை கொடுப்போமென்று மாசி மாசம் 28-ம் திகதிக்கு முன், கீழே கையொப்பமிட்ட 'சுப்பிறிம் கோட்'டுப் பிறக்கிருசி அவர்களுக்கு எழுதிக் கேட்டுக்கொள்ளலாம்.

ச. கனகசபாபதி
(பிறக்கிருசி)
மல்லாகம், சுன்னுகம்
[3609] 23-1-49

---

## மட்டக்களப்பில் விவேகானந்தர் ஜெயந்தி

மட்டக்களப்பில், ஸ்ரீஇராமகிருஷ்ண மிஷன் விவேகாநந்த மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை (29-1-49) பிற்பகல் மேற்படி ஜெயந்திவிழா நடாத்தப்பட்டது. திரு. எம். எஸ். திருவிளங்கம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். திரு. க. கணபதிப்பிள்ளை F.R.G.S, திரு. எஸ். சுப்பிரமணியபிள்ளை, வித்தியாதரிசி திரு. பி. சின்னத்துரை ஆகியோர் சொற்பொழிவுகள் ஆற்றினர். செல்விகள்: சாந்தாவதி தெய்வநாயகம், க. இந்திராவதி, மா. ராசேஸ்வரி, வை. மகாலெட்சுமி அ. கனகாம்பிகை, த. சரஸ்வதி ஆகியோரால் சங்கீதக் கச்சேரி நடாத்தப்பட்டது. சுவாமி நடராஜாநந்தர் அனைவருக்கும் நன்றி கூறினர். —நிருபர்

இப் பத்திரிகையில் வெளியாகும் ஹாஸ்யக் கட்டுரைகள், கதைகளில் வரும் பெயர்கள் கற்பனைப் பெயர்களே. கட்டுரையாளர் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்லர்.

---





I — IV தொகுதிகள்

பெரியபுராணத்திலிருந்து தெரிந்தெடுத்த அடியார் சரித்திரங்கள் சிறுவர் சிறுமியரும் எளிதிற் படித்தின்புறக்கூடிய முறையில் இனிய வசன நடையிற் கதை ரூபமாக எழுதப்பட்டவை.

சமயபாட புத்தகங்களாகப்பாடசாலைகளில் உபயோகிக்கத் தகுந்தவை.

ஒவ்வொரு தொகுதியின் விலை சதம் 50.


---

## சன்மார்க்கசபை குரும்பசிட்டி

### காந்தி சிரார்த்ததின விழா

மேற்படி சபையின் ஆதரவில் 30-1-49 ஞாயிற்றுக்கிழமை காந்திஜி சிரார்த்ததின விழா நடைபெற்றது. காலை சபைத்தலைவர் திரு நா. பொன்னையா தலைமை வகித்தார். காலை 7 மணிக்கு 'வைஷ்ணவ ஜனதோ" கீதம் வானொலி மூலம் ஒலிபரப்பப்பட்டது. பின் "சொல்லுவோம் வைஷ்ணவன் யாரெனில் கேளீர்" முதலிய பாடல்கள் திரு. விநாயகம் அவர்களால் ஓதப்பட்டன.

8 மணிக்கு நூல் நூற்றல் தொடங்கப்பட்டது. திரு.விநாயகம், திரு. க. வேலாயுதபிள்ளை, திரு. தம்பிப்பிள்ளை, திரு. வ. ஐயம்பிள்ளை என்போர் நூற்றலிற் பங்குபற்றினர். இடையிடையேவானொலி நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாலை, 5 மணிக்கு திருச்சி வானொலி மூலம் நாமக்கல் கவிஞரின் காந்தி அஞ்சலிச் செய்யுள்கள் ஒலிபரப்பப்பட்டன.

மாலை 6 மணிக்கு நியாயவாதி திரு. S. H. பேரின்பநாயகம் அவர்கள் பொதுக் கூட்டத்துக்குத் தலைமை வகித்துத் தலைமையுரை நிகழ்த்தினார்: தலைமையுரை சாஸ்திரரீதியாய் அமைந்திருந்தது.

காந்திஜீயைப் புகழ்வதற்கும் அவர் தினத்தைக் கொண்டாடுவதற்கும் யாழ்ப்பாணத்தாருக்கு உரிமை கிடையாது. அவர் அமரத்துவமடைந்த தினத்தை யாழ்ப்பாணம் கொண்டாடுவதாயின் அது காந்திஜி இறந்தமையைக் குறித்து யாழ்ப்பாணம் சந்தோஷிப்பதையே ஒக்கும். ஏனெனில் யாழ்ப்பாண மூட வழக்கங்களும்ஒழுக்கவரலாறுகளும் காந்திஜீயின் கொள்கைகளுக்கு விரோதமானவையாயிருக்கின்றன. ஆதலின் காந்திஜீயின் சேவையைப் புகழ்வதெல்லாம் நேர்மையற்ற செயல்களே. தமது நண்பர் நியாயவாதி திரு. மு. பாலசுந்தரம் ஒரு பொதுக்கூட்டத்திற் குறிப்பிட்டமையை தாமும் ஆதரிப்பதாகத் தலைவர் தம் தலைமையுரையில் குறிப்பிட்டார்.

காந்திஜீயின் கொள்கைகள் பொதுவுடைமையை ஆதாரமாகவுடையனவென்றும் அது இடதுசாரிகளின் கொள்கைகளை ஒத்ததாயினும் அதனைக் கையாளும் முறை கூடத் தூய்மையுடையது எனவும், சரியைச் செய்யவேண்டும் அதைச்சரியாயும்செய்யவேண்டும் என்பதே காந்திஜியின் கொள்கை எனவும், சமயத்துறையில் தீண்டாமையும், அரசியல் துறையில் வகுப்புணர்ச்சி, முதலாளித்துவம் என்பன நிலைபெறுமாயின் காந்திஜியின் தினத்தைக் கொண்டாடுவது மனச்சாட்சிக்கு மாறான செயலென்றும் குறிப்பிட்டார்.

பின் ஸ்கந்தவரோதயக் கல்லூரி ஆசிரியர் திரு. கு. அம்பலவாணர் அவர்கள் உபநியாசம் செய்தார்.

உண்மையும் அகிம்சையுமே காந்திஜீயின் உயிர் நாடி எனவும், அவர் அவையிரண்டினையும் தம் வாழ்க்கையில் கையாண்ட முறைகளையும் எதிரியையும் காந்திஜி இகழ்வதில்லை எனவும் அத்தகைய சந்தர்ப்பம் நேரிடுங் காலங்களில் தாம் தவறிழைத்ததாகவே காந்திஜி கூறியிருக்கின்றார் எனவும் தம் உபநியாசத்தில்குறிப்பிட்டார்.

7-30 மணிக்குச் சங்கீதபூஷணம் N. சண்முகரத்தினம் அவர்களால் ஓர் இனிய சங்கீதக் கச்சேரி நிகழ்த்தப்பட்டது. *கச்சேரி 2 மணிநேரம் நிகழ்ந்தது. 9-30 மணிக்குக் கூட்டம் முடிவுற்றது.

* * *

*இக் கச்சேரிபற்றிய விமர்சனம் இப்பத்திரிகையில் 'கலாபவனம்' என்ற பகுதியில் வெளிவருகின்றது. —ப-ர்.

---

## கொழும்பு—தூத்துக்குடி கப்பற் போக்கு வரத்து

இம்மாதம் 9-ந் தேதி தொடக்கம் கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையே கப்பற் போக்கு வரத்து ஆரம்பிக்கப்படுமாம். இவ்வாரம்ப வைபவத்தின்போது இந்தியப் பிரதம தேசாதிபதி திரு. ஸி. இராஜகோபாலாச்சாரியார் 'வ. உ. சிதம்பரன்' என்ற கப்பலைக் கொழும்பு மார்க்கமாகச் செல்வதற்கு ஆசி கூறியனுப்புவார். கொழும்பிலிருந்து திங்கட்கிழமை, வியாழக்கிழமைகளிலும், தூத்துக்குடியிலிருந்து செவ்வாய்க்கிழமை, வெள்ளிக்கிழமைகளிலும் கப்பற் போக்குவரத்து நடைபெறும்.

---

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 349/Pt இலக்கவழக்கில் 1949-ம் ஆண்டு தை மாதம் 27-ம் திகதியைக் கொண்ட கோட்டுக்கட்டளைப்படி கீழே விபரிக்கப்பட்டிருக்கும் ஆதனம் 1949ம் ஆண்டு மாசி மாதம் 16-ம் திகதி புதன்கிழமை பிற்பகல் 4 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### விபரம்

வல்லுவெட்டியிற் காலஞ்சென்ற எம். சிவசுப்பிரமணியம் பெண் சிவக்கொழுந்தவின் ஆதனத்துக்குத் தத்துவ வகையில் வல்லுவெட்டி கார்த்திகேசர் கணபதிப்பிள்ளை. தத்துவகாரன்

### ஆதனம்

அச்சுவேலி வடக்கிறை திருவாசல். நிலப்பரப்பு $6\frac{3}{8}$. எல்லை: கிழக்கு, வேலன் லுக்கேசனுக்குடைய ஆதனம். வடக்கும், மேற்கும், அப்பாக்குட்டி கணபதிப்பிள்ளையின் உரிமைக்காருக்குடைய ஆதனம். தெற்கு, சுவாமிநாதர் சின்னத்தம்பிக்கும் மறுபேருக்குமுடைய ஆதனம். இது முழுவதும் இதற்குட்பட்டதிணறும்.

S. C. Kanagasabai
கொம்மிஷனர்

புலோலி கிழக்கு
31-1-1949 [3610]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மருமக்களே!**

வணக்கம். எமர்குச் சுதந்திரம் கிடைத்து ஒருவருஷமாகின்றது. இலங்கை முழுவதும் இதைக் கொண்டாடினார்கள். நாம், இன்று சுதந்திரதேவியின் துதியைப்பாடுவோம். இச்கீதம் அமரகவி பாரதியாரால் இயற்றப்பெற்றது.

இதந்தரு மனையி னீங்கி
இடர்மிகு சிறைப்பட் டாலும்
பதந்திரு விரண்டு மாறிப்
பழிமிகுத் திழிவுற் றாலும்
விதந்தரு கோடி யின்னல்
விளைந்தெனை யழித்திட் டாலும்
சுதந்திர தேவி! நின்னைத்
தொழுதிடல் மறக்கி லேனே.

என் மருமக்களாகிய நீங்கள் ஓராண்டுப் பூர்த்தி விழாவைக் கொண்டாடும் நோக்கமாக இவ்வாரம சுதந்திரப் போட்டியொன்று உங்களுக்குத் தருகிறேன். இலங்கையின் பிரதமமந்திரி திரு. டி. எஸ். சேனநாயகா பற்றி ஓர் வியாசம் எழுதவேண்டும். மேற்பிரிவார்க்கும் கீழ்ப்பிரிவார்க்கும் அதேதான். என்றும் விபரங்களைப் பிறிதோர் பந்தியிற் காண்க.

வணக்கம்

கேசரிமாமா

மருமகன் மே.9. அல்வாய்த் தணிகாசலம் தாம் அறிந்த பத்திரிகைகளின் பெயரை வைத்து ஒரு ஆசிரியப்பா பாடியிருக்கிறார் மருமக்களே. எவ்வளவு சுவையாகவும், பொருத்தமாகவும் இது இருக்கிறதென்பதை வாசித்துப்பாருங்கள்.

—கேசரிமாமா

# பத்திரிகைகள்

## ஆசிரியப்பா

திருநாடு பாப்பா தியாகி பாரதி
திருமகள் தமிழ்நாடு திராவிடன் தமிழன்
நவயுவன் காந்தியம் நவசக்தி மன்றம்
நவஜீவன் சக்தி நாவலன் இந்தியன்
தமிழ்க்குரல் ஹரிஜன் தமிழர்நா டிந்தியா
தமிழ்முரசு சுதர்சன் தமிழ்மணி வசந்தம்
அணிகலம் தினசரி ஆனந்த விகடன்
அணிலே தினமணி ஆசிரிய தீபம்
சுயஜோதி மின்னொளி சுதேச மித்திரன்
குயில்பா சரசு குமுதங் கலைமகள்
கல்கி ஈழ கேசரி கலாநிதி
கல்வி அருணோதயம் காண்டிபம் விடுதலை
குமரன் புரட்சி குடியரசு மஞ்சரி
குமரி ஹனுமான் கூர்கலை அஹிம்சை
விருந்து நிலவு வீரகேசரியே
கிராம ஊழியன் கிளறும் தூதன்
தாய்நாடு தென்னாடு தமிழரசு தமிழ்ப்பொழில்
தியாகக் கொடியே தென்றல் நடிகன்
சினிமா லோலன் செல்இந்து சாதனம்
இன்பம் காவேரி இளைஞன் மேதாவி
சிரஞ்சீவி காதல் சிர்ஹிந் துஸ்தான்
சர்வ வியாபி சண்ட மாருதமே
உதய தாரகை உயர் தொழிலாளி
சுதந்திரன் தினகரன் சுழல்லோக சக்தி
ஆனந்த போதினி அம்புலி மாமா
ஞானசம் பந்தம் நாரதர் கரும்பு
மங்கை கதைக்கடல் மாலதி கதைமலர்
எங்கும் விமோசனம் இருதயத் தூதன்
பாரத சக்தி பாரத மணியே
பிரசண்ட விகடன் பிணக்கறு போர்வாள்
பேசும் படமே பெருந் திரைஉலகம்
முஸ்லீம் முரசு மோதும வானொலி
தாருல் ஸ்லாம் சைபுல் ஸ்லாம்
லோகோ பகாரி உயர் மறுமலர்ச்சி
சத்திய வேத பாது காவலனே
உத்தம வெண்ணிலா ஓங்கிடும் பாபுஜீ
கவரும் தந்தி காலச் சக்கரம்
சிவாஜி விரும்பும் ஜெகன்மோ கினியே
சிந்தனை அன்பன் தேசா பிமானி
வந்தனை செய்யும் வல்லவன் அசோகா
நல்வழி குங்குமம் நாட்டியம் மயிலே
கலைக் களஞ்சியம் சுதேச நாட்டியம்
குருகுலம் தேனீ குமரி மலராம்
பாரி ஜாதம் பரவும் ஜோதி
சந்திரோ தயமொடு தமிழ்ச்சித் தனுமே
ஈழ முரசே எழுசங்க நாதம்
கிராம சேவை கிளர்ஞானக் கடலே
பாரார் விரும்பும் பாலர் மலரே
கதிரவன் இலங்கா தேவி கலைக்கடல்
எதிர் வழிகாட்டி எரிமலை தொண்டன்
ஆகிய நூற்றுமூப் பானெண் அருமிதழ்
ஏகியே எங்கும் இதஞ்செய் வனவே!

—அல்வாய்த் தணிகாசலம் மே.9.

# தெரிந்ததா?

1. சிங்களவர் தம்மை ஆரியர் எனக் கூறுகிறார்கள். அது உண்மையா?
2. சிங்களவர் சிலருக்கு நாயக்கர், பண்டாரம் என்னும் பெயர்கள் இருப்பதேன்?
3. நிலாவரைக் கிணறு ஏன் நிறைவதில்லை?
4. பூமி மைலுக்கு எத்தனை அங்குலம் வளைந்திருக்கிறது?
5. ஆங்காங்கு இடிந்த விகாரைகளுக்குப் பக்கத்திலும், அரச மரங்களுக்குப் பக்கத்திலும் இந்துமதக் கோயில்களைப் பார்க்கிறோம். இதனால் என்ன அறியலாம்?

## மாமா பதில்

**பா. பஞ்சநதம்:** மே.247. உமது 'கார்ட்' கிடைத்தது. சிறு கதை மிகவும் நன்றாயிருக்கிறது.

**இ. பேரின்பநாயகன்,** மே.222: நீர் அனுப்பிய விடுகதைகள் கிடைத்தன.

**க. கந்தசாமி,** 251: உம்மை எனது மருமகனாக்கிக் கொண்டேன்.

**தணிகாசலம்,** மே.9: பத்திரிகைகள் அனுப்புமாறு காரியாலயத்திற் சொல்லியிருக்கிறேன். உமது ஆசிரியப்பா வெகு ஜோர். இம்முறை பிரசுரமாகிறது. உமது மற்றும் கட்டுரைகளும் கிடைத்தன.

**சா. சப்தகிரீஸ்வரசர்மா,** மே.104: மருமகனே நீர் கூறிய யோசனை நன்றுதான். ஆனால் அதையிட்டுப் பல தொல்லைகள் வர இடமுண்டு அல்லவா? கடிதம் எழுதும்போது உமது இலக்கத்தையும் குறித்தனுப்பவேண்டும். மலாயாவைப்பற்றிச் சில கட்டுரைகள் எழுதியனுப்பலாமே.

**தி. பஞ்சாட்சரம்,** மே.95: உமது கடிதம் கிடைத்தது. உங்கள் ஊரில் தி. பஞ்சாட்சரம் என்ற ஆசிரியர் ஒருவரும் இருக்கிறாரா? சந்தாதாரனாகச் சேருவதுதானே. 10 சதம் அனுப்பினால் பத்திரிகை அனுப்பப்படமாட்டாது.

**நா. கருணாவதி,** மே.250: உமது கட்டுரை கிடைத்தது.

**ஆ. கணபதிப்பிள்ளை,** மே.12: நான் எழுதியனுப்பிய கட்டுரை கிடைத்ததா?

**சி. இராசரத்தினம்,** மே. 54: உமது 'கார்ட்' கிடைத்தது. மருமகனே, கடிதம் எழுதும்போது உமது இலக்கத்தையும் குறித்தனுப்பி வந்தால் நலம்.

**பொ. காராளசிங்கம்,** கீ. 199: உமது இலக்கம இப்பொழுதாவது தெரிந்ததா. உங்கள் இலக்கத்தை மனத்தில் நன்றாக அமையப்பண்ண வேண்டும்.

**லோ. ஜேம்ஸ்,** மே.216: நீர் அனுப்பிய கட்டுரைகள் பிரசுரம்பெறும் என்பதை நிச்சயமாகச் சொல்லமாட்டேன். இலங்கையின் கிழ் மாகாணத்திலும், ஊவாமாகாணத்திலும் இருந்து வருகிறார்கள். ஆனால் முற்காலத்தில் உள்ள வேடுவர்கள் போல அவர்கள் இப்போது வசிப்பதில்லை. பள்ளிக்கூடம் போய்ப் படித்தும் வருகிறார்கள் சுதந்திரதின விழாக் கொண்டாட்டத்தின் போது நடந்த 'மரதன்' ஓட்டத்திற் கூடப் பங்குபற்றினார்கள். தற்போது பிறந்த எலிசபேத்துக்குக் குழந்தைகள் எப்படிப் பிறக்கும் மருமகனே. எலிசபேத்துக்கு இப்பொழுது பிறந்த குழந்தையின் பெயர் என்னவென்று கேட்டிருக்கவேண்டும். அக்குழந்தையின் பெயர் சார்ல்ஸ் பிலிப் ஆதர் ஜோர்ஜ். 'கலண்டர் அனுப்ப முடியாது மருமகனே!

## பிறந்ததின வாழ்த்துக்கள்

**6-2-49 — 12-2-49**

195. தி. இராசரத்தினம்; மே.217. லூயிஸ் அந்தோனியாள்; மே.233. சா. பழனியாண்டி; கீ.239. மா. ஜெகதீஸ்வரி.

●

மேற்குறித்த எனது மருமக்கள் இன்றுபோல் இன்னும் பல்லாண்டு வாழ்வாராக!

## முக்கிய கவனிப்பு

மருமக்களே! பின்வருனவற்றைக் கவனிக்கவும் வயது கூடியதன் காரணமாகப் பாலர் பகுதியிலிருந்து நீக்கப்பட்டவர்:

மே 68. கந்தையா தம்பிப்பிள்ளை.

வயது கூடியதன் காரணமாகக் கீழ்ப்பிரிவிலிருந்து மேற்பிரிவுக்கு மாற்றப்பட்டவர்கள்:

கீ.75. செ. நாகேஸ்வரி
கீ.76. சி. செல்லத்துரை
கீ.185. வீ. பி. நடராசா
கீ.217: லூயிஸ் அந்தோனியாள்
கீ.233. கா. பழனியாண்டி

இம்மருமக்கள் எல்லோரும் இன்று தொடக்கம் தங்களது இலக்கத்தின் முன்னால் இருக்கும் கீயை எடுத்துவிட்டு மேயைப் போடவேண்டும்.

## பதில்

1. அவர்கள் திராவிடர், தமிழரோடு பழமை தொட்டுப் பகையாதலால் தம்மை ஆரியர் எனக் கூறுவர்.
2. அவர்களின் முன்னோர் நாயக்கர், பண்டாரம் என்னும் பட்டப் பெயருள்ள தமிழர்.
3. அது கடலோடு தொடுத்திருப்பதால்
4. 8 அங்குலம்
5. [illegible] அழித்தனர்.

# சுதந்திரப் போட்டி

**மேற்பிரிவு (13—20 வயதிற்குட்பட்டவர்கள்)**

நீங்கள் விரும்பியவாறு சுவையான முறையில், இலங்கையின் பிரதம மந்திரி, திரு. டி. எஸ். சேனநாயகாவைப்பற்றி ஒருவியாசம் எழுதியனுப்பவேண்டும்.

ஒற்றை 'றூல்' அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் 5 பக்கத்துக்குக் குறையாமலும் 6 பக்கத்துக்குக் கூடாமலும், கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும்.

**கீழ்ப்பிரிவு (12 வயதிற்குட்பட்டவர்கள்)**

நீங்கள் விருப்பியவாறு இலங்கையின் பிரதம மந்திரி திரு. டி. எஸ். சேனநாயகாவைப்பற்றி ஒரு வியாசம் எழுதியனுப்பவேண்டும்.

ஒற்றை'றூல்' அப்பியாசக் கொப்பிக் கடதாசியில் 3 பக்கத்திற்குக் குறையாமலும் 4 பக்கத்திற்குக் கூடாமலும், கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதவேண்டும்.

●

இதுகாலவரையும் அங்கத்தவர்களாயிருக்கும் 250 மருமக்கள் தான் இச்சுதந்திரப் போட்டியிற் கலந்துகொள்ளத் தகுதியுடையவர்கள். இப்பக்கத்திற் காணப்படும் போட்டிப்பத்திரத்தையும் நிரப்பி வியாசத்துடன் சேர்த்தனுப்பவேண்டும். தபால் உறையில் அனுப்புவோரின் பெயர் ஒன்றும் எழுதாது சுதந்திரப்போட்டி, கேசரிமாமா, ஈழகேசரி நிலையம், சுன்னாகம் என்ற விலாசத்திற்கு 2-3-1949 ற்கு முன்னதாகக் கிடைக்கும்படி அனுப்பவேண்டும்.

## சுதந்திரப் போட்டிப் பத்திரம்

(விடையுடன் சேர்த்தனுப்பவும்)

இல.....................

பெயர் ..............................................

விலாசம்.. ..........................................

..................................................

பிறந்த திகதி... ........................ கீழ் / மேற் பிரிவு

## ஈழகேசரி — பாலர் பகுதி

முழுப்பெயர்:..............................................

விலாசம்:..............................................

..................................................

..................................................

பிறந்ததிகதி:..............................

..............................................

தந்தையார் அல்லது ஆசிரியர் ஒப்பம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மகாத்மா சிரார்த்ததின இசைக் கச்சேரி

மகாத்மா காந்தியடிகளின்சிரார்த்ததினவிழாவன்று (30-1-49) மாலை 7 மணியளவில் ஸ்ரீ வைத்தீஸ்வர ஐயரவர்களின் வாசிக்க, ஸ்ரீ எம். என். செல்வத்துரை மிருதங்கம் வாசிக்க, கனகச்சிதமாக சங்கீத பூஷணம் என். சண்முகரத்தினம் தமது இசைக் கச்சேரியைக் குரும்பசிட்டி சன்மார்க்க சபையில் நிகழ்த்தினார்.

ஆரம்பத்திலே பாமாலை என்ற உருப்படியைவந்திருந்த ஆண், பெண், சிறார்கள் கூடிய சபையோருக்கு அன்புடன் உருக்கமாகச் சூடினார். காந்தி சிரார்த்த தினத்துக்காக அவர் எடுத்துக்கொண்ட உருப்படிகளை, அழகாகவும் சரியாகவும் பாடுவதற்கு மிகுந்த கலைஞானமும் திறமையும் வேண்டும். சாதாரணமாக எல்லாராலும் அவற்றைப் பாடிவிட முடியாது. ஆகையால் இப் பாடகர் அந்த உருப்படிகளை நன்றாகப்பாடியது நமக்கு மகிழ்ச்சியை உண்டாக்கியது. அவரைப் பாராட்டவும் தோன்றுகிறது.

கேதாரகௌள இராகத்தை வெகு அழகாகப் பாடினார். எந்த ஸ்தாயியிலும் துல்யமாக ஒலிக்கக் கூடிய சாரீரத்தைப் பெற்றிருக்கிறார் சங்கீத பூஷணம் சண்முகரத்தினம். பண்பட்ட ஞானம் இருக்கிறது. லயசுத்தமும் பூர்ணமாக இருக்கிறது. அவரது பாட்டுச் சோபிப்பதற்கு வேறு என்ன தான் வேண்டும்? இராகம் பாடும்போது அவர் கையாண்ட சில பிரசினைப் பிடிகள் அவருடைய ஆழ்ந்த ஞானத்துக்குத் தகுந்த சான்றாகும். இதுவே கச்சேரியின் பிரதான ராகமென்று சொல்லவேண்டும்.

பாருக்குள்ளே நல்ல நாடு என்ற அமரகவி பாரதியின் பாட்டை அற்புதமாகச் சித்தரித்தார். இப்பாட்டு உண்மையாகவே சபையோரை உணர்ச்சி மேலீட்டால் கரகோஷம் செய்யச் செய்தது.

* * *

"சிவ பூசையில் கரடியனுர் நுழைந்தது போல் மேடை மீது நான் நுழைந்ததற்கு மன்னிக்கவேண்டும். எத்தனையோ வாலிபர்களும், பெண்மணிகளும் அண்ணாமலைச் சர்வகலாசாலை, சென்னைச் சாவகலாசாலைக்குச் சென்று சங்கீதத்தில் உயர்தரப்பத்திரம் பெற்றுவந்தும், சங்கீதத்தைச் சாதகம் செய்யாது, பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாகக் கடமையாற்றி வருகிறார்கள். ஆனால் ஸ்ரீ சண்முகரத்தினம் அவ்விதம் இல்லாது, உயர்தரப் பத்திரம் பெற்று வந்தும், தான் கற்றவற்றை நிலைநாட்டும் நோக்கத்துடன், சாதகம் பண்ணிக் கச்சேரி செய்து வருவது மெச்சத்தக்கது" என்று சன்மார்க்க சபைத் தலைவர் திரு. ந. பொன்னையா கூறினார். மீண்டும் "சென்ற சில வருடங்களாக நான், ஒவ்வொரு மார்கழி மாதமும் சென்னை சென்று அங்கு நடக்கும் இசைக்கச்சேரிகளைக் கேட்டு வருகிறேன். சண்முகரத்தினம் போன்ற பாடகர்கள் நம்மிடையே இருக்குமளவும், இலங்கையிலேயே இனிமேல் இசைஇன்பத்தை அருந்தலாம். சங்கீத வித்வான் எனறால் எங்களுக்குச் சிரிப்பாக இருக்கலாம். பொதுவாகத் தமிழ் வித்வான் பிரமஸ்ரீ கணேச ஐயர் அவர்களை எடுத்துக் கொள்வோம். அவரை வீதிவழியே பார்த்தோமானால், 'கணேசஐயர் அவர்கள் போகிறார்' என்றே நினைத்துக் கொள்வோம். வெளியூர்களில் வித்வான் பிரமஸ்ரீ கணேச ஐயர் அவர்களுக்கு நடக்கும் மரியாதையை நாம் அறிவோமா? அதுபோலவே சண்முகரத்தினத்திற்கும் திருச்சி வானொலி நிலையத்தில் கௌரவம் கிடைப்பதை நாம் அறிவோமா? அறியோம். ஒருவனைக் கௌரவித்து நடாத்த நாம் பழகவேண்டும். இன்று சண்முகரத்தினத்தின்கச்சேரியை ஒழுங்கு செய்தது அவரைக் கௌரவிக்கவே." என்று கூறி வந்திருந்தோருக்கும், பாடகர்க்கும்,பக்கவாத்தியக்காரருக்கும நன்றிகூறி முடித்தார்.

* * *

இப்பேச்சைக் கேட்டதும், சண்முகரத்தினம் எப்போ காண்பேனே என்ற உருப்படியைப் பாவ பூர்வமாகப் பாடினார். இந்த உருப்படி இடத்திற்கும் சமயத்திற்கும் மிகவும் பொருத்தமாகவே யிருந்தது.

காந்தியின் போதம் தொடர்ந்தது. இதுபிரமாதமாக இருந்தது. விழாவுக்கேற்றபாடல்களை அன்று சண்முகரத்தினம் பாடியது மிகவும் விருப்பத்தக்கதென்றே சொல்லவேண்டும்.

வேறுவிதமான சினிமாப் பாட்டுக்களோ, தெலுங்குக் கீர்த்தனங்களோ பாடாது காந்தி சிரார்த்த தினத்திற்காக சங்கீத பூஷணம் எடுத்துக்கொண்ட பாட்டுக்கள், சபையோரால் விரும்பத்தக்கதாகவே யிருந்தன என்பதை அவர் பாடிய பாட்டுக்களின் முடிவிலே அவரை மெச்சித் தாராளமாகக் கிடைத்த கரகோஷங்களிலிருந்து தெரியவந்தது.

* * *

இவ்விடத்தில் ஸ்ரீ வைத்தீஸ்வரஐயரைப் பற்றிக்கூறுமல் விடுவது பெருங்குறையாகும்.நான் இதற்குமுன்னும் இவருடைய வாசிப்பைக் கேட்டிருக்கிறேன். ஆனல் அன்று வாசித்ததுபோல் நான் முன்னொரு தடவையும் கேட்டதில்லை. பாடகர் சரியாகவிருந்தால் பக்கவாத்தியமும் சரியாகவிருக்கத்தானே வேண்டும். ஐயரவர்கள் தனி இராகங்கள் வாசிக்கும் பொழுது நம்மை மெய்மறந்து அனுபவிக்கச் செய்தார்.

* * *

ஸ்ரீ எம். என். செல்லத்துரை அன்று மிருதங்கம் வாசித்ததில் அமர்க்களப் படுத்திவிட்டார். மிகவும்பிரமாதமாகவிருந்தது. அவரின் மகோன்னத பாணிச் சிறப்பு வெளிப்பட்டது அவரது வாசிப்பில். பாடகருக்கு அனுசரணையாகவே வாசித்தார். அதுதான் பக்கவாத்தியத்தின் சிறப்பு.

* * *

சுருக்கிக் கூறினல் இம்மூவரும் சேர்ந்து நடாத்திய மகாத்மா சிராத்ததினக் கச்சேரி [illegible] என்றே சொல்லவேண்டும்.

—கே. வி. வி.

## யாழ்ப்பாணம் ஐக்கிய லாபநிதி

1918-ம் ஆ. ஸ்தாபிதமானது.

வங்கிக்காரர் மூலநிதி 8 லட்சம் ரூபா.

இதுவரையிற் கொடுக்கப்பட்ட பங்குப்பணம்

ரூபா 34,36700. 100ரூபா விகிதமான 8000 பங்குகள்

**பங்குப்பணங் கட்டுமுறை:**
மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 75 மாசகாலத்திற்கு மாதந்தோறும் கட்டப்படவேண்டியது. குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்

**தினசரிப் பற்று வரவு:**
எச்சநிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒரு விகித வட்டியுடன் தினசரிப் பற்றுவரவு செய்யலாம்.

**தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப்பணம்:**
க்ஷேமப்பணம் 3 மாசம், 6 மாசம், 9 மாசம், 12 மாசம் என்னுங் காலங்கள் வரையறுத்து ஏற்படும் வட்டியும் முறையே 1விகிதம், 2 விகிதம், 4 விகிதம், 6விகிதமாகக் கொடுக்கப்படும்.

**உண்டியல்கள்:**
கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்க விதமாகக் கொடுக்கப்படும்.
இந்தியா நோட்டு வட்டத்திற்கு மாற்றிக் கொடுக்கப்படும்.

**கடன்:**
நகைகள் ஈடுவைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். வட்டி 9 விகிதம் அறவிடப்படும். (ஈடுவைத்தவர்கள்) முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

வேண்டிய விபரங்களை என்மூலம் அறிந்து கொள்ளலாம்

S. கனகசபை
சிறுப்பர்

[3600]

## வாழிய சுதந்திரம்

— பழுகம, சரோஜ்நாதன் —

1

பருதியின் உதயங் காணப் பங்கஜம் மலர்ந்து தோன்றும்
இருந்தவச் செல்வர் தாமும் இட்டதோர் விதைகளெல்லாம்
நருமதை யனைய தூய நல்லுணர் வெய்தி நாற்றம்
பொருவறப் பொலிந்தி லங்கை பிறங்குக பெருமை மாதோ.

2

சுதந்திர வாழ்க்கை காலத் துகளறு சேவை செய்து
இதம்பெறு மாறு ஈழ அன்னைபி ஞட்சி ஓங்கப்
பதமலர் இறைஞ்சி ஐயன் பாக்கியம் பெற்ருே மென்ன
சுதனெனும் பண்பு சாலச் சூட்டுக பெருமை மன்னே.

3

அன்னையா மீழ நாடு அடிமையில் அமிழ்ந்தி வாழ்ந்த
புன்மைநா ளழிந்த பெற்றி புதுமையே புதுமை யென்ன
இந்நில மெங்கு மின்ப முரசொலி கொட்டு மைய
நன்னய மாக நாளும் நசைபெற வாழி வாழி.

4

கலங்கரை விளக்க மென்ருே? கவினுறு சங்க மென்ருே?
இலங்குமோர் முத்தமென்ருே? இன்குரற் பாவையென்ருே?
நலம்பெற நாட்டி அன்னை சானகி தவத்தி னேர்பால்
அலர்கதி ஞாயிற் றன்ன அமைந்தநற் சுதந்த ரந்தான்

5

சங்கொலி கேட்க இந்தச் சகமெலாந் தலையசைத்து
இங்கித மான வாழ்வு ஈழநன் ஞடு பெற்ற
தென்றுளம் மகிழ்ந்து இன்பப் பெருக்கினி லாடி யன்பு
தங்குக சீர்த்தி என்றும் தகைபெற வாழி என்றே.



தேக மலர்ச்சியே

அவரை தகுதியும் தந்நம்பிக்கையும் உடையவராகச் செய்கிறது

அவர் ஒரு பிரபல சாம்பியன். எல்லோரும் அவருடைய சந்தோஷ மனப்பான்மையையும் தந்நம்பிக்கையையும் மெச்சுகிருர்கள். அவர் தினமும் லைப்பாய் பாவித்து ஸ்நானம் செய்கிருர். அதன் செழிப்பான சுறுசுறுப் பளிக்கும் நுரை சருமத்துவாரங்களில் ஊடுருவிப்பாய்கின்றது. அவருக்கு ஊக்கத்துடன் மகிழ்ச்சி தரும் தேகமலர்ச்சியையும் அளிக்கின்றது. இதர ஸ்நான சோப்புகளைவிட லைப்பாய் 20% காரம் குறைந்தது. அதனுலேயே முகம், கைகள் கழுவுவதற்கு மிகச்சிறந்தது.




இதனுல் தான் அவர் பாவிக்கிருர்

லைப்பாய்

டாய்லட் சோப்

LBT. 21-169 TM

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ப் பலி

சொக்கன்

## 10

இந்த விஷயம் நாகராஜனுடைய மனதில் ஓர் துணிவை உண்டாக்கியிருக்க வேண்டும். அவர் உள்ளத்திற் சோர்ந்து மூர்ச்சையுற்றுக் கிடந்த காதல் அன்றிலிருந்து சிறிது தைரியத்துடனும், ஆவலுடனும் தன் கைகளை ஊன்றிக்கொண்டு எழுந்துவிட முயன்றது! அவர் புதுமனிதராகிவிட்டார். முதலாவதாயும், இரண்டாவதாயும் அவர் அடைந்த தோல்விகளையெல்லாம் மறந்துவிட்டார்! அவர் முகமும், அகமும் மீண்டும் மலர்ச்சியை அடைந்துகொண்டே வந்தன.

ஆனல் நாங்கள் இருவரும் மிக மிகத் துர்ப்பாக்கியசாலிகள்! துரதிர்ஷ்டம் என்ற சனீஸ்வரன் நாங்கள் போகும் இடம் எல்லாம் தொடர்ந்து வந்துகொண்டே இருந்தான். மரத்தில் ஏறும் நத்தை ஒரு அடி ஏற இரண்டு அடி சறுக்குவது போல நான் காதல் பூமரத்தில் ஒரு அடி ஏற என் அலட்சியமும், கொர்வமும் என்னை இரு அடி கீழே தள்ளிக்கொண்டிருந்தன. நான என்ன செய்வேன்?

நாங்கள் சினிமாவுக்குப் போய் வந்த இரண்டு வாரங்களின் பின் இது நடந்தது.

நாகராஜன் எனக்கு ஒரு கடிதம் எழுதியிருந்தார். தமது உள்ளத்தை அப்படியே அதில் கொட்டியிருந்தார். காதற் கடிதம் அது. ஆனல் நான் வாசிப்பதின் முனபே இது நிர்மலாவின் கைகளில் சரணடைந்துவிட்டது.

அவர் இதை எப்படியோ என் புத்தகம் ஒன்றினுள் வைத்துவிட்டார். இது எனக்குத் தெரியாது. அன்று பின்னேரம் நிர்மலாவும் அதே புத்தகந்தான் தனக்கு இரவலாகத் தரவேண்டுமென்று கேட்க வரவேண்டும்?

நானும் கபடமில்லாது அவளிடம் புத்தகத்தைக் கொடுத்தேன். இதன் பலன் அன்று இரவே கைமேல் கிட்டிவிட்டது.

என் சிநேகிதிகளுடைய படை என் அறையை முற்றுக்கையிட்டது. நிர்மலா அந்தக் கடிதத்தை என்னிடம் வீசி எறிந்தாள். கேலிகள் பாணங்கள் போன்று தொடுக்கப்பட்டன! நான் சித்திரவதைக்குள்ளானேன் என்றுதான் சொல்லவேண்டும்!

விமலா சொன்னுள். 'நாகராஜனிடம் காதற் கடிதம் பெறுவது தான் நீ அவன் மீது காட்டும் அலட்சியமோ?'

நான் சொன்னேன். 'விமலா! நீ என்ன வென்றாலும் சொல்லு. சத்தியமாக நான் இக்கடிதத்தைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை.'

'ஆஹா! சந்திரவதிதான்' என்றுள் நிர்மலா.

நான் ஒன்றும் பேசவில்லை. சந்தர்ப்ப சாட்சியங்களால் மெய்கூடப் பொய்யாகி விடுகிறது. நான் என்ன சொன்னாலும், அவர்கள் காதில் விழப்போவதில்லை என்பது எனக்குத் தெரிந்தது தான்.

'அவள் விவாகஞ் செய்து கொண்டால் அந்த மணவாளன் நாகராஜனைத் தவிர்ந்த வேறொருவனகத்தான் இருப்பான்' என்று சரோஜா நான் முன்பு சொன்னதை ஞாபகமூட்டினுள்.

'சொல்லுதல் யார்க்கும் எளிது அரியவாம் சொல்லியவண்ணம் செயல்' என்ற திருக்குறளை கமலாசனி நீட்டி முழக்கிப் பாடினுள். யாவரும் கலகலவென்று சிரித்தார்கள்.

'இன்றைக்கும் சரி; ஒரு நிமிஷமாயினும் நான் அந்தப் பிரதிக்ஞையிலிருந்து தவறவில்லை' என்று ஆற்றாமையோடு நான் கூறியபொழுது அது எவ்வளவு பொய்யான வார்த்தை என்பதை என் மனச்சாட்சி இடித்துக்காட்டியது!

"நீ சொல்வது உண்மையானல், நீ நாகராஜனைக் காதலிக்கவில்லை என்பது உண்மையானல் இந்தக் கடிதத்தை நீ அதிபரிடம் கொடுக்க வேண்டும். இதனல் நாகராஜன் இனிமேலும் உன்மீது வாலாட்ட மாட்டானல்லவா?" என்று விமலா சொன்ன பொழுது எல்லோரும் அதை ஆமோதித்தார்கள்.

வெள்ளம் தலைக்குமேல் வந்துவிட்ட தென்பதை இப்போதுதான் உணர்ந்தேன். இந்தக் கடிதத்தை நான் அதிபரிடம் கொடுப்பதால் நாகராஜன் அடையும் அவமானத்தை நினைக்கவே பயங்கரமாயிருந்தது. ஒருவேளை நாகராஜன் கலாசாலையிலிருந்து விலத்தப்பட்டாலும் படலாம்.

நாகராஜன் கலாசாலையிலிருந்து விலத்தப்பட நேர்ந்தால்? அவருடைய எதிர்கால வாழ்க்கை?

இவற்றையெல்லாம் ஒரு நிமிஷ நேரம் சிந்தித்தேன். ஆனல் கொர்வம் என்னும் அரியணையிலே வீற்றிருக்கும் தன் மதிப்பானது நீ உன் பிரதிக்ஞையைக் காப்பாற்று என்று ஓலமிட்டது. நான் அதற்கு வணங்கிக் கொடுத்தேன்.

'நாளைக் காலை கட்டாயமாக இதை அதிபரிடம் தெரிவிக்கின்றேன். இப்போது நீங்கள் எல்லோரும் போங்கள்' என்றேன். அவர்கள் போய்விட்டார்கள்.

கடிதம் மேசையின்மீது கிடந்தது. அதை முதல் தடவையாகவும் கடைசித்தடவையாகவும் எடுத்து வாசித்தேன்.

### கடிதம்

5-10-35

என் அன்புக்குரிய புவனு!

எத்தனையோ அணைகள் போட்டுத் தடுக்கவேண்டும், கட்டுப்படுத்தவேண்டும் என்று நினைத்த என் காதலானது இன்று தன் தளைகளையெல்லாம் அறுத்துக்கொண்டு இக்கடிதத்தை எழுத என்னை ஊக்கியது. நான் அசக்தனுய்விட்டேன்.

புவனு!

என் இருதயம் நிறைந்த காதலுடன் நேற்று வரை உன்னைச் சுற்றிச் சுற்றி வட்டமிட்டுக் கொண்டிருந்தேன் நான். நீ என்னை உதாசீனம் செய்தாய்; புறக்கணித்தாய். ஆனல் நேற்றுச் சினிமாவின் போது இடைவேளைகளில் நீ பார்த்த பார்வை! இனியும் உன்னல் மறைக்கமுடியாது. நீ என்னைக் காதலிக்கிறுய் என்று நான் அறிந்தபொழுது எனக்கு ஏற்பட்ட சந்தோஷம் இம்மட்டு அம்மட்டன்று. வார்த்தைகளுக்கு மேற்பட்டது அது. என்னுடைய தோல்விகளெல்லாம் உடைந்து விழுந்து அதன் அஸ்திவாரத்திலே நம்பிக்கையும் வெற்றியுமாகிய மூலபலத்துடன் என் காதற் கோயில் எழுந்ததை நான் எவ்விதம் வருணிப்பேன்!

போனவை போகட்டும்; இன்றைய என் நம்பிக்கை அசைக்கமுடியாததாய் வளர உதவிசெய்; மீண்டும் நிராசையைப் புகுத்தி என் காதற் கோயிலில் இருள் சூழ மட்டும் விட்டுவிடாதே.

என் அன்பே!

'எதிர்காலத்தைப் பற்றிக் கனவு காண்பது வீண்' என்று அறிவிலிகள்தான் சொல்வார்கள். அவர்கள் கோழைகள். பிரகாசமான எதிர்காலம் என்னையும் தன்னுள் ஒரு அங்கத்தினனகச் சேர்த்துக்கொள்ளும்' என்பதில் எனக்கு மிகுந்த நம்பிக்கையுண்டு. நீ மட்டும் உன் காதல் சாசுபதமானது என்று எனக்கு ஒரு உறுதி மொழி கொடு; நான் உனக்காக எத்தனை வருடங்களாயினும் காத்துக்கொண்டிருப்பேன். காதல் வனத்தில் **நாம் இருவரும்** கை கோத்து உலாவும் அந் நன்னுளை எதிர்பார்த்துக் கொண்டிருப்பதிலே எனக்கு ஓர் திருப்தி.

நீ என் கோரிக்கையை ஏற்றுக்கொள்வாயா? உன பதிலிலேயே என் நம்பிக்கையோ, அன்றி நிராசையோ தங்கியிருக்கிறது; மறந்துவிடாதே.

உன் பதிலை எதிர்பார்க்கும்,

**நாகராஜன்.**

ஒரு கவியின் பாணியில் அவர்தம் கடிதத்தை எழுதியிருந்தார். இதைவிடச் சிறப்பான விதத்தில் எவனுமே தன் உள்ளத்தைத் திறந்து காட்டமுடியாது. ஐயோ! என் இருதயத்திற்கே வஞ்சகம் செய்யவேண்டியன்றோ ஏற்பட்டுவிட்டது? நான் இந்தக் கடிதத்தைப் அதிபரிடம் காட்டுவதால் எவ்வளவு துரோகியாய் விடுவேன்! இதை என்னல் நினைக்கவே முடியவில்லை.

நான் காதலைத் தேடிப் போனுலும் தண்ணீரில் அமிழும் கல்லுப்போன்று அது இருதயத்தின் ஆழத்துள் அமுங்கி விடுகிறது. என்னல் அந்த ஆழமான இடத்துக்குப்போய் அதை வெளிக்கொணர முடியவில்லையே!

'நீமட்டும் உன் காதல் சாசுவதமானதென்று உறுதி மொழி கொடு; உனக்காக எத்தனை வருடங்களாயினும் காத்துக் கொண்டிருப்பேன்' என்ற அவர் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தபொழுது நான் அழுதேவிட்டேன்!

ஏழு எட்டு மணித்தியாலத்தில் விடிந்துவிடும்! நாங்கள் இருவரும் விரும்பாத அந்த நாள் உதயமாகிவிடும்! நாகராஜனின் நிமிர்ந்ததலை வெட்கத்தாலும் லஜ்ஜையாலும் குனிந்துகொடுக்கும். யாவரும் அவரைப்பார்த்துக் கலகலவென்று நகைப்பார்கள். இயற்கையிலேயே கொடுமை நிறைந்த அதிபரின் முகம் இன்னும் கொடூரமாகி அவரை உறுத்துநோக்கும்.

நாளை! இது எவ்வளவு பயங்கரமான நினைக்கக்கூடாத நிலைமை!

நான்மட்டும் இப்பொழுது ஒரு நாளாயினியாக விருந்தால்! என் உள்ளம் 'நளாயினியின் சக்தி கீழ்ப்படிவாலும் கடமையுணர்ச்சியாலுமே கைகூடும்; கொர்வத்தாலும், சுயநலத்தாலுமல்ல' என்று கொடூரமாகக் கூறியது.

இரவு நித்திரையற்றுக் கழிந்தது. தனிமையும் யோசனையும் நிறைந்த இந்த இரவைப்போன்ற எத்தனையோ இரவுகளைச் சமாளிக்க வேண்டும் என்று நான் அப்போதுகூட நினைக்கவில்லை.

நீண்டுகொண்டிருந்த அந்த இரவில் நான் செய்யப்போகும் துரோகத்தைபிட்டு யோசித்து யோசித்து என் மூளை மழுங்கிவிட்டது. அப்பொழுதுகூட என் கொர்வமும், தன்மான உணர்ச்சியும் சோர்வடையாமலே இருந்தன என்பதைஎன்னல்மறுக்கமுடியாது.

(தொடரும்)

## தமிழ்ப் பாடசாலைகளில் சிங்களம்

தமிழர் சிங்களம் கற்பதாலும், சிங்களர் தமிழைக் கற்பதாலும் இரு சமுதாயங்களுக்குமிடையில் நல்லெண்ணமும் ஐக்கிய மனோபாவமும் ஏற்படும். இதனல் ஐக்கிய சுதந்திர லங்காவை சிருஷ்டிப்பது சாத்தியமாகும் என்னும் தீர்மானமொன்று மானிப்பாய் வட்டாரக்கிராம அபிவிருத்திச் சங்கக் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேறறப்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

The
# EELAKESARI
NATIONALIST TAMIL WEEKLY
LARGEST CIRCULATION IN CEYLON, INDIA & MALAYAN UNION

Vol. 19 | Chunnakam, Sunday, Feb. 6, 1949 | No. 27

## சுதந்திர அலங்காரங்கள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மந்திரிகள் மகாநாடு. இலங்கைக்குக் கிடைத்த அரசியல் அந்தஸ்தை ருஷியா விளங்கிக் கொள்ள முடியாத காரணத்தால் இலங்கையின் மனுவை ருஷியா மறுத்து நின்றதெனப் பிரதமர் கூறுகின்றார். அடுத்ததாக லண்டன் மகாநாடு இலங்கையின் கௌரவத்தை உயர்த்தி வைத்திருக்கின்றதென்பது பிரதமரின் நம்பிக்கையாகும். இலங்கையின் நிர்வாகம் இலங்கையரிடம் ஒப்புவிக்கப்பட்டிருப்பதால் மக்கள் அனைவரும் நாட்டைச் சீராக்கவேண்டுமெனவும் பிரதமர் தமது செய்தியில் வேண்டியிருக்கின்றார்.

மக்களின் மனோபாவம் மாறுதல் பெறுவதுடன் நாட்டின் வளர்ச்சிக்காகவும் உழைக்க வேண்டுமென மந்திரி பண்டாரநாயகா அவர்கள் நாட்டு மக்களை வேண்டுகின்றார்.

### கலைக்காட்சி

வியாழக்கிழமை மாலை பிரதமர் கலை விழாவைத் திறந்து வைத்தார். சிறந்த வேலைப்பாடுகள் நிறைந்த கலைப்பொருள்கள் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. விஸ்வகர்மா என்ற கலைக்கடவுளின் பிரமாண்டமான உருவம் கவின் பெற அமைக்கப்பெற்றிருந்தது. இருபது அடி உயரமுள்ள இந்த உருவம் பத்துக் கரங்களுடன் நிற்கின்றது. செங்கற்களாலும் சுண்ணாம்பாலும் அமைக்கப்பெற்ற இச்சொரூபம் சித்திரநிபுணர்களான ஸ்ரீமான்கள் எச். ஆர். பிரேமரத்ன, ஜே. டி. ஏ. பெரேரா என்பவர்களால் மேற்பார்வை செய்யப்பட்டது.

ஸ்ரீ மலலசேகரா அவர்கள் கலைவிழாவைத் திறந்துவைக்குமாறு பிரதமரை வேண்டும்போது இவ்விழா சம்பந்தமாகப் பிரதிநிதிகள் சபையில் எழுந்த புகைச்சலைக் கண்டித்தார். கலைச்செல்வம் கருவாக்காட்டிலுள்ளவர்களுக்கு மட்டுந்தான் என்று ஒருவரும் கருதவேண்டியதில்லையென அவர் கூறி எதிர்க்கட்சியினருக்குச் 'சூடு' கொடுத்ததுமன்றி கலை சகல மக்களின் சொத்தெனவும் உணர்ச்சியுடன் பேசினார்.

### பிரதமர் ஆதரவு

பிரதமர் விஸ்வகர்மா உருவத்துக்கு முன்னர் நின்று பேசும்போது இலங்கையின் பண்டைக்காலக் கலைச் செல்வமானது புத்துயிர் பெற்று வருவதாகவும், கலை விழா இதற்கு ஓர் எடுத்துக்காட்டெனவும் தெரிவித்தார். கலையாக்க முயற்சிகளுக்கு அரசாங்கம் போதிய ஆதரவு அளிக்குமெனவும் பிரதமர் உறுதி செய்தார்.

கலைக்காட்சி உண்மையாகவே மக்களின் உள்ளங்களைக் கொள்ளை கொள்ளத்தக்க முறையில் அமைக்கப்பட்டிருக்கின்றது. இலங்கையின் புராதனக் கலைப்பெருமைபற்றி நாம் உணர்ந்து பெருமை கொள்ளாமல் இருக்கமுடியாது. அவ்வளவு சிறப்பாக இவ்விழா ஒழுங்கு செய்யப்பட்டிருக்கின்றது.

யாழ்ப்பாணத்துக் குரித்தான சொக்கட்டான் பந்தல் அலங்காரமாகத் துலங்குகின்றது. மூன்றுவித மணவறைகள் பந்தரில் நின்று போவார் வருவோரை வசீகரிக்கின்றன.

இதே போன்று சிங்களக் கலை நுட்பங்களை எடுத்துக்காட்டும் பொருள்களும் ஜோடனைகளும்காணப்படுகின்றன.

**கலைவிழா சம்பந்தமாகப்பழங்காலரசனையுடன் நடைபெறும் நாடகக் கோஷ்டி ஒன்று மட்டக்களப்பிலிருந்து வந்திருக்கின்றது. இத்துறையிற் பண்டிதர்பூபாலபிள்ளை அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சியை மக்கள் பாராட்டியே தீரவேண்டும்.**

### களியாட்டம்

விக்டோரியாப் பூங்காவில் நடைபெறும் சுதந்திரக்களியாட்டு விழாவை உள்நாட்டு மந்திரி விஜயரத்ன அவர்கள் வியாழக்கிழமை மாலை திறந்து வைத்தார். பொழுது போக்குவதற்கும் சுதந்திரத்தை நினைத்து மகிழ்ச்சிகொள்ளுவதற்குமான அனேக நிகழ்ச்சிகள் இங்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.




## அரக்கனை ஏய்த்தவீரன்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

குறைந்தவர்களால் இவைகளைச் செய்ய இயலாது," என்று தீர்மானித்துக்கொண்டான்.

அதன்பின், அங்கு ஒரு மூலையில் இருந்த ஒரு தொட்டில் அவனுக்குத் தென்பட்டது. மக்கூலும் அவனது ஆட்களும் பெற்று வளர்க்கும் குழந்தைகள் எவ்வாறு இருக்கும், அதையும் பார்ப்போம் என்று நினைத்து, அவன் அத்தொட்டிலைக் கவனித்தான். அப்போது பின்-மக்கூலே அந்தத் தொட்டிலில் படுத்துக் கொண்டு உறங்குபவன்போல் கிடந்தான். இந்த ஸ்பெயின் தேசத்து அரக்கனுக்கும்குழந்தைகள் உண்டு; ஆதலால் அவன் குழந்தைகளைக் கொஞ்சி வசப்படுத்தும் வித்தையை அறிந்தேயிருந்தான். தொட்டிலிலுள்ள குழந்தைக்குப் பல் முளைத்துவிட்டதோ என்று அறிவதற்காக, அவன் அதன் வாயில் தனது விரலை வைத்தான். அந்த விரல், தனது வாய்க்குள் நன்றாக ஆழமாய் நுழையும் வரை பொறுத்திருந்து, பின்-மக்கூல், தனது பற்களை ஒரு இரும்பிலான எலிப் பொறி போல் அழுத்தி மூடிக்கொண்டான்! அப்போது அரக்கன் கதறியதைக் கேட்கவேண்டுமோ! அவன் மேக கர்ச்சனை போலும், சிம்ம கர்ச்சனை போலும் முழக்கித் தள்ளினன். கடைசியாகத் தனது விரலைக் கொஞ்சங் கொஞ்சமாக வெளியே எடுத்துக்கொண்டு, பின், அந்த அரக்கன், "இந்த பின்-மக்கூலுக்கும் அவனது ஆட்களுக்கும் பிறந்த குழந்தைகளுக்கே இத்தகைய கூரிய பற்கள் இருக்குமானல் அவர்கள் அனைவரும் உண்மையாகவே பெரும் இராட்சதர்களாவே இருக்கவேண்டும்!" என்று சொல்லிக்கொண்டு சட்டெனத் திரும்பித் தனது வீட்டை நோக்கி ஸ்பெயினுக்குத் திரும்பிட்டான்!

அன்றிரவு பின்-மக்கூலும் அவனது ஆட்களும் சுற்றி உட்கார்ந்துகொண்டு இந்தக் கதையைச் சொல்லி வயிறு புடைக்கச் சிரித்தனர்.

## பொம்மைகளாகாதீர்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றும் உயர்வுபெற வேண்டுமாயின் அக குறிக்கோளினின்றும் மாணவர்கள் பிறழக்கூடாது.

அமெரிக்காவிலுள்ள பிரஜைகள் ஒவ்வொருவருக்கும் அரசாங்கத்தின் பிழையான போக்குகளைக் கண்டிக்க உரிமையுண்டு. சுருங்கக் கூறினல் அவர்கள் அரசாங்க நிர்வாகத்திற் பங்கெடுத்து வருகின்றனர். உள்நாட்டுக் காரியத்தில் மத்தியஸ்தர்கள் தலைப்போடுவதை அமெரிக்கர் விரும்புவதில்லை. இது ஜனநாயக அரசியலின் சிறந்த தத்துவங்களில் ஒன்றாகும். தூரத்து நாட்டில் இருக்கும் ஒருவர் தீர்மானித்துச் செய்வதிலும் பார்க்கச் சொந்த விஷயங்களைத் தாமே செய்வதே நன்று. இத்துறையில் இன்று இலங்கை முன்னேறி வருகின்றது. ஆகவே, அமெரிக்கர்களிடமிருந்து இலங்கை இரு முக்கிய விஷயங்களை அறியவேண்டும். 1. இலங்கை சுதந்திர நாடாக விளங்கச் செய்வதற்கு உழைத்தல்—இதறகாகத் தேவைக்கான பொருள்களைச் சொந்த நாட்டிலேயே உற்பத்தி செய்தல். 2. உள்நாட்டு அரசியல் நிர்வாகத்திற் பங்கு பற்றி அதைச் செம்மையாக நடாத்துவதற்கான அறிவைப் பெறுதல்.

இவற்றில் வெற்றிபெற வேண்டுமாயின், கல்வியறிவு நிறைந்தவர்கள் நாட்டிற் பல்கிப் பெருகவேண்டும். அமெரிக்க அரசாங்கம் மக்கள் அனைவருக்கும் கல்வியூட்டி வருகின்றது எத்தகைய உத்தியோகம் தமக்குகந்ததென்பதைப் படிப்பு முடிந்தபின்னர் மக்களே தீர்மானித்துக் கொள்ளுகின்றனர். தமது பண்பாட்டுக்கும், கல்விக்கும் உகந்த உத்தியோகததைத் தெரிந்தெடுப்பது மக்களைப் பொறுத்தது. அரசாங்கம் ஒருபோதும் அதை மக்கள் மீது திணிப்பதேயில்லை. உத்தியோகத்துக்காகக் கல்வி பயிற்றுவதாகில் உத்தியோகம் பெற்று வாழ்வதே மக்கள் பெறும் பயனகிவிடும். வேறு எவ்வித நலனையும் அவர்கள் ஈட்ட முடியாது. இவர்கள் அரசாங்கத்தின் கைப்பொம்மைகளாகவே அமைந்துகொள்வார்கள். கல்வியின் நோக்கம் இதுவன்று. மக்களை அடிமைகளாக்குவதே கல்வியின் நோக்கமெனக் கூறுவது எவ்வாறு பொருந்தும்? மக்களைச் சுதந்திரத்துடன் வாழச்செய்வதோடு சகல மக்களுக்கும் சம சந்தர்ப்பங்களை உதவுவதே ஜனநாயக ரீதியில் அமைக்கப்படும் பயனுள்ள கல்வியின் உயர்ந்த நோக்கங்களாகும்.

பரிசளிப்பு விழாவுக்குக் கல்லூரித் தலைவர் எஸ். கே. பங்கர் அவர்கள் தலைமை வகித்துத் தமது அறிக்கையையும் சமர்ப்பித்தார்கள். அதில் இலங்கை மாணவர்களுக்கு அமெரிக்க நாட்டுக் கல்விமுறையே உகந்ததெனவும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, யாழ்ப்பாணம்-மயிலிட்டிதெற்கு திருமகள் நிலையம் நா. பொன்னையா அவர்களால் சுன்னுகம், திருமகள் அழுத்தகத்தில் 1949-ம் ஆ பெப்ருவரி மீ 6உ ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.